

"தெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே

[ திருவளம் தி. பி. 1990 (1959) ]




# தென்மொழி

மொழி—இனம்—நாடு.


**நம் மூச்சு, நோக்கம், கொள்கை,-முயற்சி!**

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனீயப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.


பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார். (தொலைபேசி : 847829)

சுவடி 25] உ0உக மீனம் (மார்-ஏப் 90') [ஓலை: 7


# தமிழறிஞர்களின் தமிழ்ப்பணி! - 4



இலக்கிய அறிவு வேறு; இலக்கியப் புலமை வேறு! அவையே போல் இலக்கண அறிவும் வேறு; இலக்கணப் புலமையும் வேறு! இவையே போல் இலக்கியச் சொல் தொகைகள் அறியும் ஆய்வுப்பான்மை வேறு; சொல்தொகைகளின் மூலங்களும் வேர்களும் உறுத்துக் கண்டு, உற்று நோக்கி, ஒப்பவைத்து ஆய்ந்து, செப்பமுறக் காட்டும் செம்புலமை வேறு! இனி இவற்றினும் மூலத்தினும், வேரினும் உள்ளுயிராயும் உர நரம்பாயும் விளங்கும் ஒலி ஆய்வு வேறு! சொல்லுள் வெளிப்பட்டுச் செவிப்புலனாய் விளங்கும் ஒலித் தொகுதி ஆய்வு வேறு! இவற்றை முறையே அறிந்து முறைப் பட வாய்ந்து, உலகப் பிற மொழித் தொகுதிகளின் மூலங்களுடனும் வேர்களுடனும் ஒப்ப வைத்துப் பார்த்து, உண்மை கண்டு கூறும் மொழியியல், சொல்லியல் வல்லார்களா-

கிய மொழியாய்வு, சொல்லாய்வு அறிஞர்கள் எங்கே, இலக்கியச் சொற்களை எடுத்து அழகு கண்டு சுவைத்துச் சொற்சுவையிலும், பொருட்சுவையிலும் மனந் தந்து மயங்கி மகிழும் இலக்கியப் பொழிவாளரும், திறனாய்வாளரும் ஆகிய இப் போலிச் சொல், மொழிப் பெயராளர்கள் எங்கே!

சொல்லுக்குப் பொருள் தெரிந்தவர்கள் எல்லாரும் சொல்லாராய்ச்சியாளர்கள் என்று தங்களை அறிமுகப்படுத்திக் கொள்கிறார்கள். ஒரு சொல்லுக்குச் சரியான பொருளைத் தெரிந்து சொல்வது மொழியாராய்ச்சியில் ஒரு கூறுதான். அந்தப் பொருள் எப்படி வருகிறது என்பதையும் கரணிய அடிப்படையில் ஒரு மொழியாய்வாளர் கண்டு காட்ட வேண்டும். வெறும் பொருள் கூறிவிட்டால் போதாது. பொருள் மட்டும் கூறுவது இலக்கிய ஆசிரியரது பணி. அதற்குரிய காரணத்தை-யும், அதற்குரிய மூலத்தை எடுத்துக்காட்டி உறுதி செய்வதும், அந்த மூலத்திற்குரிய வேர்ச் சொல்லையும் கண்டு காட்டுதலே மொழியாய்வாளர் கண்டு காட்ட வேண்டும்.

'மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா' என்பது தொல்காப்பியம். ஒரு சொல்லுக்குரிய பொருளின் காரணம் பார்த்த மட்டிலேயே தெரிந்துவிடாது. ஆய்ந்து பார்ப்பவர்க்கே அது புலனாகும். அந்தக் காரணத்திற்கு வரலாறும் தெரிந்திருக்க வேண்டும்.

தோழன் என்னும் சொல்லுக்குத் 'தோழமை உடையவன்' என்று பொருள் என்று கண்டால், இந்தப் பொருள் எப்படி வந்தது என்பதை ஓர் இலக்கிய ஆசிரியரால் கூறி வடுதல் முடியாது. மொழியாசிரியனே அதை ஆராய்ந்து கண்டு கூற முடியும்.

தோழமை—என்பதற்குத் தோள் போல் உதவும் தன்மை—என்று பொருள்.

தோள் போல் உதவும்—துணையாக நிற்கும் தன்மையுடையவன், தோளன்.

'தோளன்' என்றால் தோளை உடையவன் என்பது பொருள். எல்லாரும் தோளை உடையவர்களே! ஆனால் இவ்வகையில் பருத்த, வலிவான, அழகிய தோளை உடையவனே தோளன் என்று சிறப்பித்துக் கூறத்தக்கவன். அதுபோல் வலிவான பருத்த தோளை உடையவன்தான் ஒருவர்க்குத் துணையாக நிற்கமுடியும். எனவே அவன் தோளன்.

இனி, தோளன் என்பது தோழன் என்று ஆவது எப்படி?

தோளையுடையவன் என்று பொதுவான பொருள் தருவதற்-குரிய தோளன் என்னும் சொல்லால், தோளைப்போல் உதவு-பவன், துணை நிற்பவன் என்று சிறப்புப் பொருள் தரவேண்டிய தேவையேற்பட்டதால், 'ள' என்னும் பொது 'ள'கரம், 'ழ'

என்னும் சிறப்பு ழகரத்தைப் பெறுகிறது. சிறப்பு ழகரத்தைப் பெற்ற பின் தோளன், தோழன் ஆகிச் சிறப்புப் பொருளைத் தருவதற்கு அடையாளச் சொல்லாக—தனிச் சொல்லாக—விரிவு பெற்றது.

இது மொழி வரலாறு. இனி, இதுதான் 'சரி' என்பதற்கு இதுபோல் எழுத்துமாற்றம் பெற்றுள்ள வேறு ஒரு சொல்லையும் எடுத்துக்காட்டாகக் காட்டுவது. இக் கருத்து உறுதி பெறு-வதற்குத் துணை செய்யும்.

'சோழன்' என்னும் சொல் 'சோளன்' என்றிருந்து சோழன் என்று சிறப்புப் பொருள் பட்டுச் சோளம் (கள்ளர்வெட்டிச் சோளம் என்னும் மக்காச்சோளம்) விளையும் நாட்டை உடை-யவன் என்று பொருள் தந்தது. சோளன், சோழன் ஆனது போல, தோளன், தோழன் ஆனது.

இது மொழி ஞாயிறு பாவாணரின் மொழி ஆய்வு!

இனி, இக்கால் சொல்லாய்வுத் துறையில் மிக மேம்பட்டு விளங்குபவரும், தஞ்சைப் பல்கலைக்கழகத்தின் தூயதமிழ் அகராதித் தொகுப்பாசிரியரும் ஆகிய சொல்லாய்வறிஞர் ப. அருளி அவர்களின் சொல்லாய்வு ஒன்றைச் சொல்லா-ராய்ச்சிக்கு எடுத்துக்காட்டாக இங்குக் காட்டுவோம்.

ஆய்-தாய்:

"தாயைக் குறித்து வழங்கிய மிக முது தொடக்கப் பழஞ் சொற்களுள் ஒன்றான 'ஆய்' என்பது பண்டைத் தமிழிலக்கியங்-களில் தனிப்பதி வெய்தவில்லை...

ஆய் (—தாய்) என்னும் சொல்லின் உண்மைத் தோற்-றத்தை உள்ளடக்கியவாறு சில கூட்டுச் சொற்கள் பின்னிப் பிணைந்த வடிவங்களில் உள்ளன. பண்டைப் பழைமைப் பயில்வு உண்மையை அவை காத்துவருவது வியப்புக்குரியதாயுள்ளது.

'யா'—என்னும் ஒலி, 'நான்' என்னும் கருத்துப் பொருளில் பயன்படுத்தப் பெற்ற பண்டைத் தொடக்கவொலிகளில் ஒன்று.

யா > யா + அன் > யான் — நான்.
யான் > ஞான் > நான்.
மே. க: யா + அம் > யாம் — நாம்.
யாம் > ஞாம் > நாம்.

மிகு நனி தொடக்கத்தில் 'தான்' என்னும் தன்மைப் பொருள் குறித்து வழங்கிய இந்த 'யா' என்னும் சொல்லும், 'ஆய்' என்னும் தாயைக் குறித்த சொல்லும் கூட்டுற்று, யா + ஆய் > யாய் என்னும் வடிவில் 'என்னுடைய தாய்' என்னும் பொருளில் பெருவழக்குற்றிருந்தது.

'யாய்' என்னுஞ்சொல், கழக இலக்கியங்களில் 67 இடங்-களில் பயிலப் பெற்றுள்ள பரப்புண்மையில், இதனின் பண்டைப் பயில்வின் பழைமையை மிகத் தெளிவாக உணர முடிகின்றது.

யா + ஆய் > யாய் — 'என் தாய்; என் அன்னை;
(நற் : 55 : 7; 258 : 2; 368 : 9)

...மிகப் பரந்த பரவலான வழக்கால் 'என் தாய்' என்னும் சிறப்புக் கூட்டுச் சொல்லான 'யாய்' என்பது 'நற்றாய்' என்னும் பொருளுக்கும், பின்னர்ச் செவிலித்தாய் என்னும் பொருளுக்கும், பின்னர் அதனினும் பொதுப் பட்டுத் 'தாய்' என்னும் பொதுப் பொருளுக்குமாகப் படர்ந்து பயிலப் பெறுவதாயிற்று.

யாய் — நற்றாய் (அகம் 240 : 9)
யாய் — செவிலித்தாய் (அகம் 18 : 17)
யாய் — தாய் (அகம் 203 : 2)

யகர ஞகரத் திரிபேற்று 'யாய்' என்பது 'ஞாய்' என்றவாறு மூச்சொலி சிறந்து முன்னுற்றும் வளர்ந்தது.

யாய் > ஞாய் — என் தாய், நின் தாய்.

'ஞாய்' என்பதுவும், 'யாய்' என்னுமாறு போலவே 'என்-தாய்' என்னும் பொருளுடையதேயாயினும், காலத்திற்குத் தேவைப்பட்ட கருத்துப் பெருக்க வளர்ச்சி நிலையில், முன்னிலை குறித்த சொல்லாகி முற்குறித்தவாறும் வழங்கத் தலைப்பட்டது.

(எ-டு) ஞாயையும் (கலி : 107 : 26)
ஞாய் — முதற்பொருள் என் தாய்
வளர்ச்சிப் பொருள் — நின் தாய்.

'ஞாய்' என்பது மேலும் பொதுப்பட்டவாறு—'தாய்' என்னும் பொருளிலேயும் வழங்கப்பட்டமை, ஞாய்+ஆர் > ஞாயர்—(தாய்மார்) என்ற சொல்லாட்சிப் பதிவுகளாகக் கழக இலக்கியங்களில் சிலவற்றில் காணக் கிடக்கின்றமையிற் புலனு-கின்றது.

(எ-டு) (1) ஞாயர் பயிற்ற (கலி 81 : 12)
(2) ஞாயர் பால் (கலி : 85 : 28)
(3) ஞாயர் மாட்டை (கலி : 85 : 36)

தாய் என்னும் தன்மை குறித்த முற்பேற்றையுடைய 'என் தாய்' என்னும் பொருளையுடைய சொல்லாகிய (யா+ஆய்—யாய்.) என்பது முன்னிலை குறித்தும் வழங்கிய வழக்குண்மையை 'நுந்தையும் யாயும் கடியரோ நின்னே' என வரும் ஐங்குறு நூற்றின் 98-ஆம் பாடலின் வரியொன்றால் தெள்ளிதின் அறிய-லாம்.

இவ்விடத்தில்—'யாயும் ஞாயும் யாராகியரோ' எனத் தொடங்கும் குறுந்தொகையுள் வரும் செம்புலப்பெயனீரார் அவர்களின் 40-ஆம் பாடலில் உள்ள முனைப்பட்ட வரி நன்கு சிந்திக்கத் தக்கதாகும்;

யாயும் ஞாயும் யாராகியரோ; (உரை =) 'என் தாயும் நின் தாயும் ஒருவருக்கு ஒருவர் என்ன உறவுடையவர் ஆகுவர்?

இங்கு 'யாய்' என்னும் சொல்லுக்கு 'என்தாய்' என்ற பொருளும் 'ஞாய்' என்னும் சொல்லுக்கு 'நின்தாய்' (உன்னுடைய தாய்) என்ற பொருளும் உரைக்கப் பெற்றுள்ளன. கருத்து விளங்கித் தோன்றுவதற்கென இப் பொருட் கூற்று முறை ஓரளவுக்குச் சரியேயானும் 'ஞாய்' என்னும் சொல்லுக்கு 'நின் தாய்' என்னும் பொருட்பாடு சொல்லமைப்பாக்கத்தின் மூலக் கருவில் இல்லை என்பதை உணர்தல் வேண்டும்.

(இச் செய்யுளில் இரண்டாம் சீராக வந்துள்ள 'ஞாயும்' என்னும் சொல்லுக்குப் பகரமாக 'யாயும்' என்ற வடிவமே இருந்து வந்துள்ளதென்றவாறு—1894-இல் எழுதப் பெற்ற தான்படியினின்று எடுத்த நுண்படமும் (இலண்டன் நூலகத்தில் உள்ளது). மதுரையில் 1899-இல் பெரும்புலவர் இரா. இராகவனார் அவர்களால் படியெடுக்கப் பெற்றுள்ள கையெழுத்துப் படிவமும் (அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துள் உள்ளது—) நமக்குக் காட்டி நிற்கின்றமை கருத்திற் கொள்ளத் தக்கன! இம் மேற்குறிப்பிடப் பெற்றுள்ள பாடவேறுபாடு தமிழ் புரந்தந்த வள்ளல் உ. வே. சாமிநாதர் பெருமகனாராலும் காட்டப் பெற்றுள்ளது.

யாய் (—என் தாய்). இச் சொல் தன்மையோடு தொடர்புடையது என்பது—''யாயென்ப தன்மையோடு ஒட்டுதலின் முறைப் பெயரெனினும் உயர்திணையாம்'' (தொல், பெயரியல்-26) என நச்சினார்க்கினியரும், யாயென்பதோவெனின் தன்மையோ டடுத்தமையின் முறைப் பெயரேனும் உயர்திணையெனப்படும்'' எனக் கல்லாடரும் வரைந்துள்ள உரைப் பகுதிகளால் தெளிவுற்று நிற்கின்றது.]

ஆக, யாய் (யா + ஆய்) என்பதுவும், (யாய் >) ஞாய் (யகர ஞகரத் திரிபு) என்பதுவும், என் தாய் என்னும் ஓரே பொருளடிப்படையிலேயே தோன்றிக் காலவட்டத்தில் தன்மை முன்னிலை என்னும் ஈரிடத்தும் பொதுப்பட வழங்கும் பிறழ்வுப்பேறு பெற்று நிற்கின்றன என்பது மொழியியல் வழங்கும் உண்மையாகும்.

''எம் + ஆய் > யாய் என்றானது—என்றவாறாக முற்குறிப்பில் பிழைபாடாகக் குறித்துவிட்டுப் பின்னர்—நம் + ஆய் > நாய் என்றாகி அதன் பின்னர் அதுவே 'ஞாய்' என்றாயுள்ளது'' என்றும், 'அது நம் அன்னை' என்னும் பொருளுடையது என்றும் பாவாணர் ஐயா அவர்கள் மிகத் தவறாகக் குறித்துள்ளார்கள்.

'நர்ய்' என்னும் வடிவம் ஒரு விலங்கையும் குறித்தலால் அம் மயக்கை நீக்குவதற்கு 'ஞாய்' எனத் திரிந்தது என அவர் காரணம் காட்டியுள்ளமை மிக மிகப் பிழைபாடானதாகும். 'ஞாயும்' (குறுந் : 40 : 1) என்னும் சொல் 'மோயும்' என்றவாறு இருத்தல் வேண்டும் என்றும், 'இத்தகு மரபு வழுக்கள் கடைக் கழகக் காலத்திலேயே தோன்றிவிட்டன' என்றும் கூறியுள்ள அவரின் கருத்துகளும் இந் நிலைக்குப் பொருத்தமானவையல்ல!

(காண்க : "பண்டைத் தமிழ நாகரிகமும் பண்பாடும்" பக்கம் : 89—90)

ஆய்—தாய்;

'அம்முலை நல்கிய ஆய்என உவந்தனள்' (ஞானா-மிர்த : 35 : 10)

ஆய் + ஆய் > ஆயாய் > ஆயா—ஆய்க்கு ஆய்; தாயின் தாய்; பாட்டி.

ஆய் + அள் > ஆயள் > ஆயாள்—பாட்டி.

'அள்' என்னும் பெண்பாலீற்றை 'ஆய்' என்னும் பெண்பாற் பெயருடன் பிணைத்துக் கட்டியது—சொல்லியல் வரலாற்றில் மிகப் பிந்துநிலையுடையதாகும்.

ஆய் > ஆயி—தாய் (திருப் : 156)

ஒ. நோ : கருப்பாயி; பொன்னுயி; மாரியாயி.

(சொல்லாய்வறிஞர் அருளியின் 'பெற்றோரைப்பற்றி' என்னும் நூலிலிருந்து.)

ஈங்குக் காட்டிய இரண்டு சொல்லாராய்ச்சிக்கான எடுத்துக் காட்டுகளிலிருந்தும் சொல்லாய்வும் மொழியாய்வும் எத்துணை ஆழமானவை, அகலமானவை, நுண்ணறிவு சான்றவை, நுழை-புலம் மிக்கவை என்பவை தெள்ளிதின் விளங்கும். இவற்றை விடுத்து, வெறும், இலக்கிய, இலக்கணப் புலமை கொண்டு மட்டும் சொல்லாய்வுக்கும் மொழியாய்வுக்கும் இறங்கி விடுதல் கூடாது.

மொழியாய்வில் பற்பல கூறுகள், பகுதிகள், பாகுபாடுகள் உள்ளன. அவை ஒலியியல், வேரியல், மூலவியல், சொல்லியல், வேர்ச் சொல்லியல், மொழியியல் என்று அடிப்படைப் பிரிவுகள் கொண்டவை.

ஒலியில் (Sounds) மட்டும் கத்தொலி (Cries) உணர்வொலி, (Interjections) ஒப்பொலி; செய்கை யொலி என்று பிரிவுகள் உள.

இவற்றுள் (1) கத்தொலியில் தோன்றும் சொற்கள்:

ஓ—ஓய்—ஓசை, ஓதை, ஓல், ஓலம், ஓலி.
கூ—கூய்—கூவு—கூப்பிடு
ஏ—ஏய்—ஏவு—ஏவல்
ஆ—ஆய்—ஆவு—ஆவல்
ஈ—ஈய்—ஈவு—ஈதல்—ஈகை
ஐ—ஐயே—ஐயா—ஐய.
வெள—வெளவால்;

(2) உணர்வொலியில் தோன்றும் சொற்கள்:

ஆ, ஊ, ஏ — ஆஆ—ஊஊ—ஏஏ
ஐ, ஓ — ஐ, ஐஓ, ஐயே, ஐயோ, ஓஓ.

(3) ஒப்பொலியில் (Imitatives) தோன்றும் சொற்கள்:

கா—காகா—காக்கை; கூ—கூகூ, கூயில், குயில்; மா—மாடு; காழ்—காழ்தை, கழுதை; மியா—மியாவ்; குர்—குரங்கு; கொக்—கொக்கி, கோகி, கோசி, கோழி.

(4) வாய்ச் செய்கை யொலியில் (Oral Gesture) தோன்றும் சொற்கள்:

வா—வரவு; போ—போகு, போக்கு; ஏ—ஏறு; ஓ—ஓடு; சே—சேர், செல்; அ—அது, அங்கு, அவன், அவள்; இ—இது, இங்கு, இவன், இவள்; உ—உது, உங்கு, ஊங்கு, உவன்.

(இவ்வெடுத்துக் காட்டுகள் பாவாணரின் ஆய்வை அடிப்படையாகக் கொண்டவை.)

இவ்வடிப்படைப் பிரிவுகளில்லாமல் ஒலியியல் (Phoneme-Phoneties-Phonology), ஒலியனியல் (Phonomics), சொல்லியல் (Morpheme-Morphology), உருபு ஒலியியல்(Morpho Phonomics), சொற்பொருளியல் (Semantics), மொழி அமைப்பியல் (Typhology) ஆகிய கூறுகளிலும்,

மொழியியலில்; (Linguistics), ஒப்பியன் மொழியியல், (Comparitive Linguistics), உறழ்நிலை (Contrastive), வண்ணனை (Descriptive), வரலாறு (Diachronic or Historical), கிளைமொழியியல் (Dialectol), இரு கிளை மொழியியல் (Diglossia), நாட்டுப்புற (Folks) மொழியியல், மாந்தவினவியல் (Anthropology), அமைப்பியல் (Structural), கணக்கியல் (Mathematical), உளவியல் (Phycho), குமுகவியல் (Sovio) முதலிய கூறுகளிலும் ஒரு மொழியாய்வாளர் ஆயப்பட வேண்டியவையும் அறிந்து கொள்ள வேண்டியவையும் நிறைய உள்ளன.

இவற்றின் அனைத்துக் கூறுகளினதும் அடிமுடி தெரியாமல், தாமும் மொழியியல் ஆராய்ச்சியாளர் என்றும், சொல்லியல் ஆய்வாளர் என்றும், இளம்பாவாணர் என்றும் கற்றறியா வணிகவியல் தமிழ்ப் பற்றுளர் ஓரிருவரைக் கொண்டு விளம்பரம் பெற்று வரும் தமிழாசிரியர் சிலரின் உண்மை நிலை நகைப்பிற் கிடந்தருமேயன்றி, நிறைவான மொழியியல் ஆய்வாளர்கள் அவர்கள் என்று அறிஞர்கள் கருதி மகிழ்வதற் கிடந்தராது என்பதைத் தமிழன்பர்கள் அறிந்து கொள்க.

இனி, நம் நடுநிலை உள்ளத்தையும் ஆய்வையும் பொறுத்த அளவில், துணிவாகக் கூறவேண்டுமானால், இன்றைய நிலையில், மொழியியல். சொல்லியல் ஆய்வில் தமக்கென ஒரு தனியிடம் பெற்று விளங்குபவரும், இன்னும் தெளிவாகக் கூறவேண்டுமானால், நம் மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களை யடுத்து, அவரினும் பல மடங்கு மேலாக விளங்கித் தோன்று-

பவரும், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் தூயதமிழ், அறிவியல் சொல்—அகராதிகளைத் தொகுத்து வருபவரும் ஆகிய, சொல்லாய்வறிஞர் ப. அருளி அவர்களே இத்துறைகளில் ஏற்றம் பெற்றுச் சிறந்து நிற்பவர் ஆவர். இஃது அவர் மேல் வைத்த பற்றினாலோ, உறவாண்மையினாலோ கூறப் பெறுவதன்று. நம் கூற்றை, அவரால் எழுதி வெளி வந்துள்ள மொழியாய்வு நூல்களே மெய்ப்பித்துக் காட்டும். அவரை அறியாதார் அந் நூல்களைப் பெற்று மேலோட்டமாகப் பார்த்த அளவிலேயே கூட உணர்ந்து மகிழ்வர்.

எனவே, இனியேனும் நம் தமிழறிஞர்களில் ஒருசிலர் மொழியாய்வு, சொல்லாய்வுத் துறைகளில் தாங்களும் ஈடுபட்டு வருபவர்கள் என்று ஆசைக்கேனும் கூறிக் 'குன்று முட்டிய குருவிகள் போல், தம் மண்டைகள் உடைபட்டு மயங்கி மாண்டுபோக வேண்டா'மென்றும், தம் சொல்லுத்திறனால் 'கொல்லுத் தெருவில் ஊசிவிற்க வேண்டா'மென்றும் அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

இனி, தமிழறிஞாகளாக உள்ள வரலாற்றறிஞர்கள் சிலர், தாம் எழுதுகின்ற தமிழ் வரலாறு, தமிழர் வரலாறு, தமிழ்நாட்டு வரலாறு, தமிழ் இலக்கிய வரலாறு, தமிழ்ப் புலவர் வரலாறு, தமிழறிஞர் வரலாறு, தமிழக ஊர் வரலாறு, தமிழரசர் வரலாறு, தமிழகக் கலைகள், பண்பாட்டு, நாகரிக வரலாறு, கல்வெட்டியல், புதை பொருள் ஆய்வியல் முதலிய வரலாற்று நூல்களை நடுநிலையான ஆய்வடிப்படையிலோ, தமிழ்ப்பற்று, தமிழினப்பற்று, தமிழ்நாட்டுப்பற்று கொண்டோ எழுதுவதில்லை; காய்தல் உவத்தலுடனேயே அவர்கள் எழுதி வெளியிடுகின்றனர்; அதிலும் அவ் வரலாற்றுப் பேராசிரியர்கள் பார்ப்பனர்களாக இருந்துவிடில், தமிழ்மொழி மேலும், தமிழினத்தின் மேலும் உள்ள காழ்ப்புணர்ச்சியாலும், வெறுப்பினாலும், மறைமுகமாக அவற்றைத் தாழ்த்த வேண்டும் என்னும் நோக்கத்துடனும்; சமசுகிருத மொழியினும், ஆரிய வரலாற்றினும் அவற்றை மேம்படுத்தி உரைக்கக் கூடாதென்னும் கரவினாலும், அவ்வரலாற்று நூல்களை நடுநிலையாகவும், மறைக்காமலும் எழுதுவதில்லை; அதிலும் அப்பார்ப்பன வரலாற்றறிஞர்கள், சிற்சில வரலாற்றுத் துறைகளில் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டவர்களாக இருந்துவிட்டால் சொல்லவே வேண்டுவதில்லை. அவர்கள் மனம் போன போக்கில் தமிழ்மொழி தமிழின நலன்களையும், அருமை பெருமைகளையும் அடியோடு மறைக்க முடியாமல் அவற்றை விளக்கமாகவும், வெளிப்படையாகவும், உண்மையாகவும் கூற முடியாதவர்களாகி, ஒவ்வொரு சிறப்பிலும் பெருமையிலும் ஓரளவே கூறி, பிறவற்றை மூடி மறைத்து விடுபவர்களாகவே இருக்கின்றனர்; சிலர் அவ்வாறு கூற இயலாத நிலையில், கூறுகின்ற ஓரிரு தமிழ் தழுவிய செய்திகளை ஆரியச் சார்பினவாகக் காட்டி வரலாற்றுத் தன்மையையே தலைகீழாய் மாற்றி எழுதி விடுகின்றனர்;

(தொடரும்)

# தொல்காப்பியம்!

உரைப் பெரும்புலவர். சந்திர பாலசுந்தரனார்.

நான்மறையாவது: புறக்கருவிகளான் அறியப்படுதலை வெளிப்படை என்றும், அகக்கருவிகளான் உணரப்படுதலைக் குறிப்பு என்றும் இலக்கண நூலார் கூறுவர். வெளிப்படையாவது பருமை. குறிப்பாவது நுண்மை. நுண்பொருளாயது தனித்து நில்லாது பருப்பொருளை இடமாகக் கொண்டு, அதனுள் மறைந்து நிற்கும். ஆதலின் அஃது அப்பொருள் பற்றிய மெய்யறிவில்லார்க்கு விளங்கித் தோன்றாது. எனவே அந்நுண் பொருளை 'மறை' என வழங்கினர் சான்றோர். அத்தகு நுண்பொருளைப் பற்றிப் பேசும் நூலினை மறைநூல் என வழங்கினர். அறநூல், இலக்கண நூல் என்பவை வழக்கு மிகுதியான் 'அறம்' என்றும் 'இலக்கணம்' என்றும் குறைத்து, மறைநூலை ''மறை'' என்றே வழங்கலாயினர்.

அவ்வாற்றான் மறை என்பது நுட்பமாக உணரத்தக்கதாகலின் நுட்பத்துள் நுட்பமாகிய இறைத் தன்மையையும், அத்தன்மையை எய்த மேற்கொள்ளும் தவம் முதலாய ஒழுக்கங்களையும் பற்றிப் பேசும் நூல்களையும், தவம் முதலானவற்றை மேற்கொண்டு புரியுங்கால் நேரும் இடையூறுகளை நீக்க ஓதப்பெறும் மந்திரங்களைக் கூறும் நூல்களையும், மலரினும் மெல்லியதாய காமம் பற்றிய நுண்மைகளை விளக்கும் நூல்களையும், போர்க்கலை. இசைக்கலை, நாடகக்கலை, மருத்துவக்கலை முதலாயவற்றை நுண்மையோடு கூறும் நூல்களையும், பண்டை மெய்யறிவாளர்கள் ''மறை'' என்றே வழங்கியுள்ளனர். பின்னர் வடமொழி வேதம் மறை என வழங்கப்பட்டு, அவ்வழக்குப் பெருகிய பின், இஃது அருகியது எனலாம். இதனை

> ''மறைமொழி கிளந்த மந்திரத் தான''—(செய்-163)
>
> ''நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
> மறைமொழி தானே மந்திரம் என்ப''—(செய்-176)
>
> ''அகத்தெழு வளியிசை அரில்தப நாடி
> அளபிற் கோடல் அந்தணர் மறைத்தே''—(எழுத்-102)
>
> ''மறையோர் தேயத்து மன்றல் எட்டனுள்
> துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே',-(களவி-1)
>
> ''காமப் புணர்ச்சியும் இடந்தலைப் படலும்
> பாங்கொடு தழாஅலும் தோழியிற் புணர்வுமென்
> றாங்கநால் வகையினும் அடைந்த சார்பொடு
> மறையென மொழிதல் மறையோர் ஆறே''—(செய்-184)
>
> ''அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
> உளவென மொழிப இசையொடு சிவணிய
> நரம்பின் மறைய என்மனார் புலவர்''—(எழுத்-33)

என இவ்வாசிரியர் (தொல்காப்பியர்) கூறுமாற்றான் நன்கறியலாம். இவற்றுள் வந்துள்ள மறை என்னும் சொல் இற்றைக்கு

வழங்கும் இருக்கு முதலாய வடமொழி வேதத்தைக் குறிக்க-வில்லை என்பது நன்கு புலனும்:

இவ்வாறு, இம்மை வாழ்வையும், மறுமைப் பயனையும் நுட்பமாக உணரும் வண்ணம் மறைந்து கிடக்கும் நுண்ணிய உண்மைகளை நிறைமொழி மாந்தராய மெய்யறிவாளர் தம் கூர்த்த அறிவினால் உணர்ந்து, அவற்றை முயற்சியுடையார் யாவர்க்கும் விளங்குமாறு பருமையாக்கிப் 'பனுவல்' என்னும் பெயரான் வழங்கினர். இவ்வரையறை காலப்போக்கினால் யாவர்க்கும் உணர்தல் அரிதானமையில், நிலவொளிக் காலத்தும், ஏனைக் காலத்தும் நிகழும் எற்படு பொழுதினை மாலை என்னும் பெயரால் வழங்குதல் போல, இடைக்காலத்தார் மறை நூலையும் பனுவல் நூலையும் வேறுபாடின்றி வழங்கலாயினர்—வடமொழிச் சாய்காலால் (செல்வாக்கால்) அவையும் இக்காலத்து அருகின:

ஆக, இருமைக்குந் துணையாவனவாய்த் துறைதோறும் பல்கிப் பெருகிய நூல்களனைத்தையும் ஏதேனும் ஒரு முறை பற்றி வகுத்துக் கொண்டு வழங்க எண்ணிய பண்டைப் புலவர் பெரு-மக்கள் வாழ்வொழுக்கத்தை அகம், புறம் முதலாகப் பகுத்துக் கொண்டமை போல, இம் மறை நூல்களையும் இம்மைக்குரிய-வாகிய தனிமாந்த ஒழுக்கம் பற்றியும், குமுகாய அமைப்பாகிய அரசியல் முறை பற்றியும், ஆடவரும் பெண்டிரும் கூடி வாழும் இன்பியல் ஒழுகலாறு பற்றியும்,மறுமைக்குரியதாகிய வீட்டு நெறி பற்றியும் வகுக்க எண்ணி அவற்றை அறம், பொருள், இன்பம், வீடு எனத் தலைப்பிட்டு நான்காக வகுத்து அவற்றை நான்மறை எனக் கொண்டு வழங்கினர். இவ்வுண்மையை இந்நூலுள்,

> ''கட்டமை ஒழுக்கத்துக் கண்ணுமை யானும்''
>
> ''அந்தணர் திறத்தும் சான்றோர் தேஎத்தும்
> அந்தமில் சிறப்பின் பிறபிற திறத்தினும்
> ஒழுக்கம் காட்டிய குறிப்பினும்''

—என அறம்பற்றி வருவனவற்றானும்,

> ''பொருளொடு புணர்ந்து பக்கம்''

—எனப் பொருள்பற்றி வருவதனானும்,

> ''இன்பமும் பொருளும் அறனும்என் றாங்கு
> அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கு''

—என இன்பம் பற்றி வருவதனானும்,

> ''ஐயர் பாங்கினும் அமரர்ச் சுட்டியும்
> செய்பெருஞ் சிறப்பொடு சார்தற் கண்ணும்''
>
> ''ஏமுறு கடவுள் ஏந்திய மருங்கு''
>
> ''தெய்வம் அஞ்சல் புரையறந் தெரிதல்''
>
> ''காமம் சான்ற கடைக்கோட் காலை
> ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
> அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
> சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே''

—என வீடுபற்றி வருவனவாற்றானும், இவை போல்வனவாக இந்நூலுள் வரும் பிறவாற்றானும் தெளிவாக உணரலாம்.

இம் மரபை ஒட்டியே திருவள்ளுவர் முப்பால் நூல் செய்ததும், அதனைச் சான்றோர் தமிழ்மறை என வழங்குதலும் என்க. தமிழகச் சான்றோர் இவ்வாறு மறைநூல்களை நான்காக வகுத்துக் கொண்டு வழங்கியமை நோக்கியே பல கூறுகளாக இருந்த 'இருக்கு' முதலிய மந்திரங்களைத் தொகுத்து, அவற்றை நான்கு வேதங்களாக ஆரியர் அமைத்துக் கொண்டனர் என்ப. இதனை நச்சினார்க்கினியர் உரையாலும் மேலை நாட்டு ஆய்வாளர் உரைகளாலுமே நன்கு உணரலாம்.

நான்மறை என்பதற்கு நச்சர், தைத்திரியம், பௌடிகம், தலவகாரம், சாமவேதம் எனும் நான்கு என்றார். இவை தமிழ்ப் பனுவல்களல்ல என்பது யாவரும் அறிப. வடமொழி வேதங்களும் இப்பிரிவினவாக இல்லை. வியாசமுனிவர் வேதங்களை... நான்காக வகுப்பதற்கு முன்பே, தொல்காப்பியம் செய்யப் பெற்ற தென்பதை நச்சர் உணர்ந்தவராதலின் இருக்கு முதலியவற்றை நீக்கி வேறு ஒரு நான்கினைக் கூறுவாராயினர்.

மேலும் இத் தமிழ் மரபை ஒட்டியே வடவாரியரும் தர்ம, அர்த்த, காம, மோட்ச என வகுத்துக் கொண்டு, இவற்றைப் புருடார்த்தம் என்று போற்றுவாராயினர். பின்னர் அவர்தம் முயற்சியான் பெருக்கிக் கொண்ட நூற்செல்வங்களானும், பல்வேறு திறமைகளானும் தென்னாட்டு அந்தணர்களைத் தம் வயப்படுத்திக் கொண்டு, மன்னர்களைச் சார்ந்து, ஏற்ற சூழ்வுத்தி (உபாயங்)களான் உயர்ந்து, ஆசாரியர்களாகவும் அமைச்சர்களாகவும் அமர்ந்து, சமசுக்கிருத மொழியைத் தமக்கே உரிமையுடையதாக ஆக்கிக் கொண்டு, பிராகிருத (உள்நாட்டு) மொழிகளைத் திருத்தி, யாவும் சமசுக்கிருத மொழியினின்றும் பிறந்தவை எனப் பிற்காலத்தார் மயங்கும் வகையில் செப்பனிட்டுப், பாரதத்தில் வழங்கும் மொழிகளுக்கெல்லாம் (தமிழ் உள்பட) ஆரியமே தாய் என்று சொல்லுமளவிற்குச் செய்து விட்டனர்.

தமிழர் தம் தாய்மொழியின் சிறப்பையும், நுண்மையையும் உணர்ந்து பரப்பாமையோடு, பயின்றுணர்தலையும் மறந்து பல்லாற்றானும் சுருங்கியமையானும், சிலர் வடவர் கூற்றுக்குத் துணைபோயினமையானும், பலர் தமிழ் நூல்களையும் அவை பற்றிய ஆய்வுகளையும் தள்ளவும் எள்ளவும் முற்படுவாராயினர். இத் நிலைமையான் வரலாறு தலைகீழாக மாறித் தமிழ்மொழியும், தமிழ்நூல்களும் வடமொழிச் சார்பினானேற்றன் வளமுற்றன என ஆய்வாளர் கூறும் அவலநிலை எய்தியுள்ளன. அதற்கேற்பப் பல நூல்கள் ஆரியச் சார்பினவாக இடைக்காலத் தெழுந்தன. இன்றைய கல்வியாளர் பலர் மேனாட்டு மொழிகளையும் ஆய்வுகளையும் பின்பற்றி வருகின்றனர். தமிழரிடை இற்றைக்கு ஏற்பட்டுள்ள மாற்றம் ஆரிய மொழியினின்று மேலையாரிய மொழிக்கு மாறியுள்ளமை தவிர வேறில்லை.

மற்று, தமிழ்கூறும் நல்லுலகத்து வழக்கும், செய்யுளும் நாடி நிலத்தொடு முந்துநூல் கண்டு, மயங்கா மரபின் எழுத்து முறை

காட்டி, முறைப்படத் தொகுக்கப் பெற்ற இவ் விலக்கண நூலைக் குறைவற்றதொரு பனுவல் என ஆய்ந்து அறிந்து கூற அமர்ந்த ஓர் ஆசிரியனுடைய கல்வியறிவையும், நூலறிவையும் சுட்ட வந்த பனம்பாரனார்—தமிழ் மொழிக்கும் தமிழ் இலக்கணத்திற்கும் எவ்வாற்றானும் இயைபில்லாத வடமொழி நால்வேதத்தை முற்றக் கற்றவர் எனக் கூறிக் காட்டினார் எனல் பொருந்துமா? இடைக்கழகக் காலத்தில் தோன்றி இன்றளவும் சிறப்புற்று வழங்கி வருகிறது, இத் தொல்காப்பியம் என்பதை அறிஞர் பலர் ஒப்புகின்றனர்.

தொல்காப்பியர் நூல் செய்த காலத்து வடமொழி வேதம் நான்காகப் பகுக்கப்பட்டிருந்ததா, பட்டிருப்பினும் தமிழகத்தில் பரவியிருந்ததா, பரவியிருப்பினும் தமிழ் அறிஞர்கள் அவற்றை விரும்பிக் கற்றுச் சிறந்திருந்தனரா, சிறந்திருப்பினும் தமிழ்ப் புலவர் அச்சிறப்பொன்றையே பாராட்டியிருப்பரா? தொல்காப்பியனின் தமிழ் நூலாய்வு பற்றிய அவர் தமிழ்ப் புலமையை விளக்கிக் கூறி, அதன்பின் அவர்தம் பல்கலைப் புலமையைச் சுட்டுதல் வேண்டி ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் என விளக்கிய பனம்பாரனார் அதங்கோட்டாசானின் தமிழ் நூலறிவை மட்டும் உய்த்துணர வைத்தார் எனல் ஏற்புடையதாகுமா? ஆகாதெனின் நான்மறை என்றது, அறம், பொருள், இன்பம், வீடு பற்றிய தமிழ் மறைகளையே எனக் கொள்வதில் குறையின்றென்க.

(தொடரும்)

---

பன்மொழிப் புலவர்

# அப்பாத்துரையார் குடும்பத்திற்கு அருள்கனிந்து உதவுங்கள்!

இது தொடர்பான முழு அறிக்கையையும் சென்ற தென்மொழி சுவடி : 25, ஓலை : 5, தமிழ்நிலம் இதழெண் 134-இல் கண்ணுற்றிருப்பீர்கள். இல்லையானால், இப்பொழுதாவது எடுத்துப் படியுங்கள். படித்தவுடன் உங்கள் உள்ளத்தில் எந்த மூலையிலாவது ஓர் இரக்கவுணர்வு தோன்றுமானால், இன்றே, இப்பொழுதே உங்கள் கைகளில் உள்ளதைப் பன்மொழிப் புலவர் அப்பாத்துரையாரின் துணைவியார்க்குக் கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவிட்டுத் தென்மொழிக்கு ஓர் அஞ்சலட்டையில் செய்தி தெரிவியுங்கள். அப்படியே தங்கள் நண்பர்களிடமும் இச்செய்தி பற்றிச் சொல்லி, அவரையும் இத்தொண்டுக் கொடையில் ஈடுபடுத்துங்கள். மறவாதீர்கள்.

தமிழக அரசும், கலைஞரும் செய்ய விரும்பாததைத் தமிழன்பர்கள் செய்யட்டும்!

தொகை விடுக்க வேண்டிய முகவரி:
திருவாட்டி அலர்மேலு அப்பாத்துரை.
10, அப்பாத்துரையார் தெரு.
தேனாம்பேட்டை, சென்னை-18.

அன்பன்
பெருஞ்சித்திரனார்

## பட்டியல்-1

# ஆசிரியரின் அன்பு வேண்டுகோளுக்கு இசைந்து பன்மொழிப் புலவர் அப்பாத்துரையார் அவர்களின் குடும்பத்துக்கு உதவிய தூய தமிழ் நன்னெஞ்சங்கள்:

*(பிப்ரவரி 90 முதல் 15-3-90 முடிய)*

| | | உருபா |
|---|---|---|
| 1. | ப. தமிழ்ப்பித்தன், சென்னை-13 | 50-00 |
| 2. | பேரா. சாலை. இளந்திரையன், சென்னை-86 | 100-00 |
| 3. | தென்மொழி, சென்னை-5 | 100-00 |
| 4. | ப. பத்மநாபன். வழக்கறிஞர், சோமனூர் | 100-00 |
| 5. | மா. அரசு, ஆசிரியர், கோபிசெட்டிபாளையம் | 100-00 |
| 6. | குமுதவல்லி, மீஞ்சூர் | 50-00 |
| 7. | அ. பொன்னுசாமி, ஆசிரியர், ஈரோடு | 50-00 |
| 8. | வரதராசன், தமிழாசிரியர், ஈரோடு | 50-00 |
| 9. | பஞ்சவர்ணம், தமிழாசிரியை, ஈரோடு | 50-00 |
| 10. | அருள்மணி, பெங்களூர்-21 | 3000-00 |
| 11. | மு. தமிழ் நெஞ்சன், துறையூர் | 50-00 |
| 12. | செ. அருச்சுனன். அறி. இ. திருச்சி-14 | 50-00 |
| 13. | எழில். சென்னை-79 | 25-00 |
| 14. | இரத்தினவேல், நெய்வேலி-1 | 20-00 |
| 15. | கல்லை-அருட்செல்வன், ஒட்டன்சத்திரம் | 50-00 |
| 16. | கீதா உதயகுமார், ஐதராபாது | 30-00 |
| 17. | வி. காந்தி. பெங்களூர்-8 | 100-00 |
| 18. | பகுத்தறிவு இளைஞர் பேரவை, மயிலாடுதுறை | 50-00 |
| 19. | மதுரை. தமிழ்நாடன். மதுரை-1 | 15-00 |
| 20. | இ. முத்துசாமி, இலத்திகுளம் (நெல்லை) | 10-00 |
| 21. | பேரா. சாலை. இளந்திரையன், சென்னை-86 (இரண்டாம் முறை- மார்ச்சு '90 | 100-00 |
| 22. | ந. முனுசாமி பெங்களூர்-60 | 100-00 |
| 23. | வினைதீர்குன்றன், ஆத்தங்குடி (காரைக்குடி) | 60-00 |
| 24. | பாவலர் இளஞ்சித்திரன், சென்னை-48 | 25-00 |
| 25. | தமிழகத் தமிழாசிரியர் கழகம், வேலூர். (வ. ஆ) | 1000-00 |
| 26. | அரு. கோபாலன், சென்னை-24 | 25-00 |
| 27. | சி. கைலாசம், ஈரோடு | 15-00 |
| 28. | நற்றேவன், பனப்பாக்கம் (அம்பேத்கார்) | 10-00 |
| | மொத்தம்: | 5385-00 |

தமிழறிஞர் குடும்பத்தைக் காக்கும் தண்டமிழ்ப் பணிக்குத் தோன்றாத் துணையாக நிற்கும் மெய்ம்மைத் தமிழ் நெஞ்சங்களுக்கு எம் நெஞ்சு நிறைந்த வாழ்த்துகளும் நன்றியும் உரியவாகுக!

குறிப்பாக, தம் வாழ்நாள் தேவையைக்கூட நினைத்துப் பாராமல், பேரறிஞர் குடும்பம் நலியக்கூடாது. தொய்வடையக் கூடாது என்று நினைந்து வாரிக் கொடுத்த பேரருளாளர், வெங்காலூர் அருள்மணி அவர்கள் அருந்தமிழ் நெஞ்சைப் போற்றி வணங்குகிறோம்.

ஆசிரியர்

(தொடரும்)

## ஆதரவு நெஞ்சங்களின் அன்பு மடல்கள்!

### 1. போலியர்க்கும் புல்லர்களுக்குமே காலம்!

பேரன்புசால் ஐயா! வணக்கம். தங்களின் வேண்டுதல்—'அப்பாத்துரையார் குடும்பத்திற்கு உதவுங்கள்'—மடல் தென்மொழி இதழ் வாயிலாக அறிந்தேன்; மனம் நொந்தேன். போலியர்களுக்கும், புல்லர்களுக்கும்தான் இது காலம், உண்மைத் தொண்டர்களுக்கும், உழைப்பாளிகளுக்கும் உயர்வில்லை; வாழ்வில்லை. உங்கள் வேண்டுதலின்படி அவர் குடும்பத்திற்கு உரு. ஐம்பதை இன்று பணவிடை வழி விடுக்கின்றேன்.

—மு. தமிழ் நெஞ்சன். துறையூர்.

### 2. கொடுக்க மனமிருந்தும்...!

அன்புள்ள ஐயா, வணக்கம். தங்களின் வேண்டுகோளை ஏற்று, இன்று உரு 50/- காசோலை அனுப்பியுள்ளதன் மூலம் நிறைவேற்றிவிட்ட செய்தியைத் தெரிவிக்கிறேன்... எவ்வளவோ கொடுக்க மனமிருந்தும், பொருட் குறைவால் இச்சிறு அளவே கொடுக்க முடிந்தது... தமிழகம் வெறும் சோற்றுக்கு மாரடிக்கும் மக்கள் கூட்டம் நிரம்பியதாகப் போய்க் கொண்டு இருப்பது வருத்தத்திற்குரியதுதான். என் செய்வது? தங்களைப் போன்றவர்களால்தான் வாழ்வதில் ஒரு பொருள் இருப்பதாக உணர்கிறேன். தங்கள் பணி தொடரட்டும்.

—செ. அருச்சுனன், திருச்சி-14.

### 3. கலைஞர் ஏன் இப்படி நடந்து கொள்கிறார்?

அரும்பெறல் ஆசிரியரீர்! வணக்கம். தென்மொழியில் (சு. 25; ஓ 5) தங்களின் உருக்க மடலைப் படித்தேன். மடலை முடிக்கையில் கண்களிலிருந்து வழிந்த கண்ணீரை என்னால் அடக்க முடியவில்லை. இரவு நெடுநேரம் வரை அழுது கொண்டிருந்தேன். பேரறிஞர் அண்ணா உயிருடன் இன்றிருந்தால் அந்த அறிஞரின் குடும்பத்தை இப்படி நடுத்தெருவில் விடுவாரா?...கலைஞர் ஏன் இப்படி நடந்து கொள்கிறார்? கட்சி அரசியலே இதற்குக் காரணியம். அறிய வெட்கமாக இருக்கிறது. நாம் அவரிடமிருந்து எதிர்பார்ப்பது கட்சி அரசியலை அன்று. தமிழ் அரசியலையே என்க. அந்தத் தமிழ் அரசியலே அவரது இறுதிக் காலத்தில் அவரை உயர்த்தும். அவரின் தமிழ் அடையாளங்களே எச்சமாக நின்று அவரைக் காத்து நிற்கும்...

மறைந்த முதல்வர் ம. கோ. இரா. தாம் முதல்வராக இருந்த நேரத்தில் தம்மைப் பலவாறாக இழித்தும் பழித்தும் வந்த தம்மோடு ஒத்துவராத—தமக்கு மாறுபட்ட பேராயக் கட்சியில் இருந்த—கண்ணதாசனை,—பழைய நிலைகளை நினைவு கூர்ந்து, திராவிட இயக்க உணர்ச்சியோடு, தமது ஆட்சியில் அரசவைப் பாவலராக அமர்த்தவில்லையா? அதன் மூலம், தமக்கு இருக்கும் பெருந்தன்மையை உலகுக்கு அவர் அறிவித்துக் கொள்ளவில்லையா? தமக்கிருக்கும் தாயுள்ளத்தையும் காட்டிக் கொள்ளவில்லையா...

நம் அறிஞர் அப்பாத்துரையார் என்ன தவறு செய்தார்? அவர் நமது மொழிக்கும் இனத்திற்கும், நேராகத் தி. மு. கழகத்திற்கும், தொண்டு செய்து உழைத்தவர். அவரின் நற்செயல்களுக்குப் பயனாக அவரது குடும்பத்தை வருத்துவது என்பது சரியன்று; அறமும் அன்று. குடும்பத்தார் தவறு செய்திருப்பினும், அறிஞர் அப்பாத்துரையார் அவர்களின் தொண்டைக் கருத்தில் கொண்டு அவரின் எச்சங்களை ஆதரிக்க வேண்டுவது கலைஞர் போன்றவர்களின் கடமை! கலைஞர் அவர்களிடம் தாயுள்ளத்தைக்கூட எதிர்பார்க்கவில்லை; தமிழ்த் தாயுள்ளத்தையே எதிர்பார்க்கிறேன்! அன்றும் இன்றும் என்றும் தங்கள் மாணவன்,

—பாவலர் இளஞ்சித்திரன், சென்னை-48

## 4. கண்ணீர் வடிக்கிறேன்!

பேரன்புடையீர். வணக்கம். பன்மொழிப் புலவர் அப்பாத்துரையார் குடும்பநிலை கண்டு, கண்ணீர் வடிக்கிறேன். என்னால் முடிந்தவரை நண்பர்கள் பலரிடமும் கூறியுள்ளேன்.

— அ. துரையரசு, கைகாட்டிப் புதூர்.

## 5. பொருள் தண்டலில் ஈடுபட்டுள்ளோம்!

பேரன்பின் ஐயா அவர்களுக்கு, வணக்கம். தென்மொழியில் பன்மொழிப் புலவர் அப்பாத்துரையார் குடும்ப நிலைபற்றிய செய்தி அறிந்து மிகத் துயரமாக இருந்தது; உடன் நாங்கள் பொருள் தண்டலில் ஈடுபட்டுள்ளோம். தாங்கள் கவலுற வேண்டா. கூடிய விரைவில் அய்யா குடும்பத்திற்கு அனுப்பி வைத்துத் தென்மொழிக்குத் தெரிவிக்கிறோம். தமிழக அரசு செய்யத் தவறியதை (தவிர்த்ததை)த் தாங்கள் முன்னின்று செய்யத் துணிந்ததைத் தமிழ் கூறும் நல்லுலகம் என்றென்றும் நன்றியுடன் நினைவு கூரும். மிக்க அன்புடன்,

—நிலா வேங்கடவன், கோபி செட்டிபாளையம்.

## 6. தவறாது செய்ய வேண்டிய கடமை!

அன்புள்ள தமிழ்த்திரு. பெருஞ்சித்திரனார் அவர்களுக்குத் தென்மொழி அன்பன் வே. காந்தி மிக்க அன்புடன் எழுதிக் கொள்வது.

அல்லலுறும் அப்பாத்துரையாரின் குடும்ப நிலையறிந்து மிகவும் வருந்தமுற்றேம். மேலும், தங்களின் வேண்டுகோளின்படி தென்மொழியன்பர்கள் அனைவரும் தவறுது செய்யவேண்டிய கடமைகளில் இதுவும் ஒன்று என எண்ணி, அக் குடும்பத்தினர்க்குக் காசோலை மூலம் உருபா 100/- அனுப்பியுள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். —வே. காந்தி பெங்களூர்-8.

### 7. தமிழ்த் தொண்டு தொடரட்டும..!

...தாங்கள் 'தென்மொழி'யில் அறிவித்தபடி அப்பாத்துரையார் அவர்களின் குடும்பத்திற்கு உரு 50/- மட்டும் அனுப்பியுள்ளோம். தங்கள் தமிழ்த் தொண்டு என்றும் தொடர வாழ்த்துகள்! —பகுத்தறிவு இளைஞர் பேரவை, மயிலாடுதுறை

### 8. தங்கள் தொண்டுக்குத் தலைவணங்குகிறேன்!

மதிப்பிற்குரிய ஐயா. வணக்கம்... தமிழுக்குழைத்தவர்களின் குடும்பங்களைப் புரக்கும் தங்கள் தொண்டுள்ளத்திற்குத் தலை வணங்குகிறேன். —கோ. இரத்தினவேல், நெய்வேலி-1

### 9. பெருநிதி வழங்க இயலவில்லை

பேரன்பு மிக்க ஐயா பாவலரேறு அவர்களுக்கு, வணக்கம். பன்மொழிப் புலவர் அப்பாத்துரையார் குடும்பத்திற்குப் பெருநிதி வழங்க இயலவில்லை... வாழ்க வையகம்! வாழ்க வளமுடன்!

—இ. முத்துசாமி, இலத்திகுளம். தெய்வநாயகப்பேரி;

---


தஞ்சைப் பல்கலைக் கழகத்தின் "தூயதமிழ் அகரமுதலி"—"அறிவியல் சொல்லாக்க அகரமுதலி"-ஆகியவற்றின் தொகுப்பாசிரியர்;

சொல்லாய்வறிஞர்

அருளியின் நூல்கள்

1) நிறைந்தேன் (பாத்தொகை) (அச்சில்)
2) தகுதி (மொழியாய்வுக் கட்டுரை) ,,
3) சிங்கள அமர்க்களம் 5-00
4) இவை தமிழல்ல...! 15-00
5) இந்திய அரசே இன்னுமா உறக்கம்? 5-00
6) தமிழ், சமற்கிருதம் மற்றும் பிற இந்திய மொழிகளின் ஆராய்ச்சி நிறுவனத்தில் அருளி ஆற்றிய மொழியாய்வு உரைகள்:
ஐந்து தொகுதிகளும் சேர்ந்து 100-00
(தனித் தொகுதி விற்பனைக்கில்லை.)
7) இரு வானொலி உரைகள் (மொழியாராய்ச்சி) 5-00
8) பெற்றோரைப் பற்றி (மொழியாராய்ச்சி) 25-00
(பதிவு அஞ்சல் கட்டணம் தனி)

வெளியீடு, கிடைக்குமிடம்:

அறிவன் பதிப்பகம்

காளிக்கோயில் தெரு, தமிழூர்: புதுச்சேரி-9

# ஆட்டுத் தோல் போர்த்த இந்தி ஓநாய்!

தஞ்சை நலங்கிள்ளி, அமெரிக்கா

ஓநாய் ஒன்று ஆட்டுக்கிடைக்குட் புகுந்து ஆடு ஒன்றைக் கொன்று தின்ன விரும்பியதாம். ஆட்டுக் கிடையிடையே ஓநாய் புகுந்ததும், ஆடுகள் ''மா, மா'' எனக் கத்திட, ஆட்டிடையன் வந்து ஓநாயை விரட்டியடித்தானும். இது தொடர்ந்து மூன்று இரவுகள் நடந்ததாம். இது கண்ட ஓநாய், இனி என்ன செய்யலாம் என்று எண்ணமிட்டதாம். ஆடுகளை ஏமாற்றி, அவை ஏமாறி நிற்கும் வேளையில் அவற்றிலொன்றைக் கொன்று தின்றிடத் திட்டமிட்டதாம். அடுத்த நாளிரவு ஆட்டுத் தோலொன்றைத் தன் மீது போர்த்திக் கொண்டு, ஆட்டுக் கிடைக்குட் புகுந்ததாம். ஆடுகள் அந்த ஆட்டுத்தோல் போர்த்த ஓநாயும் ஆடு தான் என ஏமாறி நிற்கும் வேளையில், ஓநாய் ஆடொன்றைக் கொன்று தின்றுவிட்டு ஓடி விட்டதாம். இது தொடர்ந்து பல இரவுகள் நடந்ததாம். படிப்படியாக ஆட்டுக் கிடை நலிந்து பட்டதாம்.

மேற் கூறியது கட்டுக்கதை, வெறும் கற்பனை. ஆனுல் இக் கட்டுக் கதையைப் போன்ற ஏமாற்று நிகழ்ச்சிகள் இந்தியத் துணைக் கண்டத்தில் கடந்த நாற்பதாண்டுகட்கு மேலாக நடந்து வருகின்றன. வட இந்தியர்கள் திட்டமிட்டுக், கரவாக, நம் மீது இந்தியைத் திணித்து அதன் வழி தமிழ் மொழியைத் தமிழ்க் கலைகளைத், தமிழ்ப் பண்பாட்டை மட்டுமல்லாமல் தமிழர் தம் பொருளியல் நிலைகளையும் படிப்படியாகச் சீரழித்து வருகிறார்கள். ''இந்தியைத் திணிக்கிறோம். ஆங்கிலத்தை அகற்றி அதனிடத்தில் இந்தியை அரசோச்ச வைப்போம்'' எனப் பச்சையாகச் சொன்னுல், இந்தி பேசாதவர்கள்—குறிப்பாகத் தமிழர்கள்—அதனை எதிர்ப்பார்கள் எனக் கருதி, கரவு நெஞ்சம் கொண்ட வட இந்தியர் ''ஆங்கிலத்தை அகற்றி, அதனிடத்தில் தெலுங்கு, தமிழ், வங்காளம், இந்தி ஆகிய இந்திய மொழிகளைப் பயன் படுத்துவோம். வெளி நாட்டு ஆங்கிலத்தை இன்னும் வைத்துக் கொண்டுருப்பது வெட்கக்கேடு'' என வெளிப்படையாகக் கூறிக் கொண்டு, ஆங்கிலத்தின் இடத்தில் இந்தியை மட்டும் ஏற்றி வைத்திடும் முழு முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். தில்லி அரியணையில் அமர்ந்திருக்கும் வட இந்தியப் பெருந் தலைவர்கள் மட்டுமல்லர், அவரோடுசேர்ந்து அரசோச்சும் பிற தில்லியமைச்சர்கள் மட்டுமல்லர், வட இந்தியாவின்பிற தலைவர்களும் கூட இந்தியைப் பிறரின் (தமிழர் உட்பட) வரிப் பணம் மூலம் வளர்ப்பதிலும், இந்தியைப் பிறர் மீது திணித்து, அதன் வழி தமதும், தமது பிள்ளைகளதும் வருங்காலம் தென்னிந்தியரின், தென்னிந்தியப் பிள்ளைகளின் வருங்காலத்தை விடச் செழுமையாகவும், கொழுமையாகவும் அமைந்திடவும் திட்டமிட்டுத் தொடர்ந்து ஏமாற்று முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள் என்பதைச் சில நாள்களுக்கு முன் புது தில்லியில் ஏமாற்று

நிகழ்ச்சி யொன்று தெள்ளென விளக்கும். அந் நிகழ்ச்சியையும், அந் நிகழ்ச்சியை நடத்தியோரின் உட்கிடக்கையையும், கரவுணர்வினையும் சற்றே ஆய்ந்து பார்ப்போம்.

இந்திய அரசு ஐந்து "இந்தியத் தொழில் நுட்ப நிறுவனங்களை" (Indian Institute of Technology) புது தில்லி, பம்பாய், சென்னை, கான்பூர், கரக்பூர் ஆகிய ஐந்து நகரங்களிலும் நடத்துகிறது. இந் நிறுவனங்களில் அறிவியலும் (Science), பொறியியலும்(engineering) பண்டாரகர் பட்ட நிலை வரையிலும் (Doctorate degree) கற்பிக்கப்படுகின்றன. இந் நிறுவனங்களை நடத்துவதற்கான செலவுகளை தில்லியரசு (இந்திய அரசு) ஏற்றுக் கொண்டுள்ளது. அஃதாவது, தமிழகம் உட்பட எல்லா மாநிலங்களும் தில்லி அரசுக்குச் செலுத்துகின்ற வரிப்பணம் மூலம் இவ் வைந்து நிறுவனங்களும் நடத்தப்பெறுகின்றன. இந் நிறுவனங்கள் இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள மற்றைய பல்கலைக் கழகங்களை விடச் சிறந்தனவெனக் கருதப்படுகின்றது. இந் நிறுவனங்களில் படித்துப் பட்டம் பெறுவோர் வெளிநாடுகளில் கூடச் சிறப்பாகக் கருதப் படுவதாக என் பொறியியல் நண்பர்கள் கூறுகிறார்கள். இவ்வாறு இந் நிறுவனங்கள் தனிச் சிறப்பு மிக்கனவாதலால், இந் நிறுவனங்களுக்கு எல்லா மாநிலங்களிலிருந்தும் மாணவர்கள் வந்து படிக்கிறார்கள். இந் நிறுவனங்களில் படிக்க வேண்டுமென்றால், அதற்காக ஆண்டுதோறும் நடத்தப்பெறும் நுழைவுத் தேர்வில் (entrance examination) உயர்ந்த மதிப்பெண்கள் பெற்றாக வேண்டும். இதுவரையிலும் இந் நுழைவுத் தேர்வு ஆங்கிலத்தில் நடத்தப்பெற்றது. பயிற்று மொழியும் ஆங்கிலமே. இதனால் எல்லா மாநில மாணவர்களும்(தாய் மொழி இந்தியானாலும் சரி, தெலுங்கானாலும் சரி, தமிழானாலும் சரி) இந் நுழைவுத் தேர்வில் சரி நிகராகப்(சரி சமமாகப்) பங்கெடுத்து, தக்க மூளைத் திறனுடையோர் அந் நிறுவனங்களில் மாணவராகும் வாய்ப்பிருந்தது. இது இந்திக் காரர்களுக்குப் பிடிக்கவில்லை. இந்தியத் தொழில் நுட்ப நிறுவனங்கள் (Indian Institute of Technology) எல்லா மாநிலத்தவரும் செலுத்தும் வரிப்பணத்தால் நடத்தப் பெற்றாலும், அவற்றை இந்திய அரசு நடத்துவதால், அவை தமது பாட்டன் வீட்டுச் சொத்து என்று இந்த இந்திக் காரர்கள் நினைத்துக் கொள்ளுகிறார்கள். இந் நிறுவனங்களுக்கான நுழைவுத் தேர்வுகள் (entrance examinations) ஆங்கிலத்துடன் இந்தியிலும் நடத்தப் பெற்றால், இந்திக்காரருக்கு மற்ற மொழியினரை விட இந் நிறுவனங்களில் மாணவர்களாகும் வாய்ப்பு பெருகும் எனக் கருதி, அதற்காகக் கோரிக்கை விடுக்க எண்ணமிட்டார்கள். ஆனால், அவ்வாறு இந்தியிலே நுழைவுத் தேர்வு நடத்த வேண்டுமென வெளிப்படையாகச் சொன்னால், தமிழரிடமிருந்து பெரும் எதிர்ப்பு வரக் கூடும் எனக் கருதி, "எல்லா இந்திய மொழிகளிலும் நுழைவுத் தேர்வு நடத்தப் பெறவேண்டும்" என ஒரு போலிக் கோரிக்கையை எழுப்பி இந்தி பேசாதவர்களை ஏமாற்றி மயக்கினார்கள்: பாரதீய பாசா சங்காரீச் சமிதி (Bharatiya Basha

Sangharsh Samiti) என்ற வட இந்திய இயக்கம் இக் கோரிக்கையை முன் வைத்துப் போராட்டம் தொடுத்தது. 1989-ஆம் ஆண்டு சூலைத் திங்களில் சியாம் உருத்திர பதக் (Shyam Rudra Pathak) என்ற இந்திக்காரரும் இன்னும் சில மாணவர்களும் பட்டினிப் போர் (உண்ணாவிரதம்) நடத்தினர். வாச்பாயீ (Vajpayee) என்ற இந்திக்காரப் பாராளுமன்ற உறுப்பினர் ''இப் பட்டினிப் போரில் ஈடுபட்டுள்ள மாணவர்கள் யாராவது இறந்து பட்டால், நிலைமை வன் முறையாக வெடிக்கும் ... இந்திய அரசு நுழைவுத் தேர்வுகளை இந்திய மொழிகளில் நடத்த வேண்டும்'' என்று கூறினார். (1965-இல் இந்தித் திணிப்பை எதிர்த்துத் தமிழர் சிலர் தீக்குளித்துத் தம்மையே பலியாக்கிக் கொண்டனர். வட இந்தியப் படையும், வட இந்திய அரசுக்குக் கீழ் அடிமையாட்சி நடத்திய தமிழக அரசின் (அந் நாளைய முதலமைச்சர் பக்தவச்சலம்) காவலர் படையும், இந்தியை எதிர்த்துப் போராட்டம் நடத்திய தமிழரில் ஏறத்தாழ ஐந்நூற்றுவரை சுட்டுக் கொன்றன. அதைப் பற்றி இந்த வாச்பாயீயோ, வேறு இந்தித் தலைவர்களோ கவலைப் படவில்லை. இப்படித் தமிழர்கள் சாகிறார்களே, கொல்லப் படுகிறார்களே, ''இந்தித் திணிப்பை நிறுத்துங்கள்'' என்று சொல்லவில்லை. ஆனால் இப்போது நாலு இந்திக் காரர்கள் பட்டினிப்போர் நடத்தியதும் அவர்களுக்காகக் கவலைப்பட்டு ''நுழைவுத் தேர்வை இந்திய மொழிகளில் நடத்துங்கள்'' என்று சொல்கிறார். ஐநூறு தமிழர்களின் உயிரென்றால் இழிவு! (கேவலம்), எந்த மதிப்புமில்லை. ஆனால் நாலு இந்திக் காரரின் உயிரென்றால் பெருமதிப்பு என நினைக்கிறார் இந்த இந்திக்காரப் பாராளுமன்ற உறுப்பினர். (''நாமெல்லாரும் இந்தியர்'' என்றும் இந்திய ஒற்றுமை என்றும் நினைக்கிற தமிழர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.)

இவ்வாறாக நுழைவுத் தேர்வுகள் ஆங்கிலத்தில் மட்டுமல்லாமல் இந்திய மொழிகளிலும் நடத்தப் பட வேண்டுமென்ற இந்திக்காரரின் போரட்டத்துக்கு இந்திய அரசு சொன்ன விடை என்ன? 1989-ஆம் ஆகத்து திங்கள் 17-ஆம் நாளில் ''இனிமேல் நுழைவுத் தேர்வுக்கான கேள்விகள் ஆங்கிலத்தில் மட்டுமல்லாமல் இந்தியிலும் கொடுக்கப்படும்'' என்று அறிவித்தது. உடனடியாகப் போராட்டம் நிறுத்தப் பட்டது. போராட்டத்தை நடத்திய 'பாரதீய பாசா சங்கார்ச் சமிதி' என்ற வட இந்திய இயக்கம் நுழைவுத் தேர்வு இந்திய மொழிகள் எல்லாவற்றிலும் நடத்தப்பட வேண்டும் என்று உண்மையிலேயே விரும்பியிருந்தால், உடனடியாகப் போராட்டத்தை நிறுத்தியிருக்குமா? இந்திய மொழிகள் எல்லாவற்றிலும் நுழைவுத் தேர்வு நடத்தப் பட வேண்டும் எனக் கோரிப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தியிராதா? 'பாரதீய பாசா சங்கார்ச் சமிதி' என்ற அந்த வட இந்திய இயக்கத்தின் உட்கிடக்கை ஆங்கிலத்துடன் இந்தியும் நுழைவுத் தேர்வு மொழியாக அமைய வேண்டு மென்பதும், அதன் வழி வரும் மேற் படிப்பு, நல்ல வேலைகள், நல்ல வருவாய்கள் யாவும் இந்திக்

காரருக்கு அமைய வேண்டும் என்பதுமே யாகும். இந்தியத் தாய் மொழியாகக் கொண்டிராத மக்களைக் கீழ்ப்படுத்துகின்ற அந்தக் கரவான, வஞ்சகமான உட்கிடக்கையை, ''இந்திய மொழிக-ளெல்லாவற்றையும் பயன்படுத்துக'' என்ற ஆட்டுத்தோல் போர்வையால் மூடி மறைத்தனர்.

இன்னு மொன்றையும் இங்கு சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்தியா தொழில் நுட்ப நிறுவனங்களின் நுழைவுத் தேர்வை இந்தி பேசாத மாணவர்கள் தம்தம் தாய் மொழியிலேயே எழுத வேண்டுமென்றால், அதற்குத் தேவையான அறிவியல் (science) பொறியியல் (engineering) நூல்கள் இந்திய மொழிகளனைத்தி-லும் எழுதப்பட வேண்டும். நிலை என்ன? இந்திய அரசு தமிழகம் உட்பட எல்லா மாநிலங்களிலிருந்தும் தண்டிச் சேர்க்கின்ற வரிப் பணத்திலிருந்து பல கோடி உருபாக்களை இந்தி மொழியில் அறி-வியல், பொறியியல், மருத்துவவியல் நூல்களை எழுதச் செலவிடு-கிறது. தமிழ், தெலுங்கு, கன்னடம், வங்காளி ஆகிய பிற மொழி களுக்காக இந்திய அரசு நூற்றிலொரு பகுதி கூடச் செலவிட வில்லை. மாநிலங்கள் தம்தம் மொழிகளை வளர்க்கட்டும் என்று சொல்கிறது. உண்மையிலேயே இந்திய அரசு ''இந்திய மொழிக-ளெல்லாம் வளர்வது ஆங்கிலம் அகற்றப் படவேண்டும்'' என்று கருதுமானால், எல்லா இந்திய மொழிகளின் வளர்ச்சிக்கும் ஒரே அளவில் செலவு செய்ய வேண்டும். இந்தியின் வளர்ச்சிக்காக இந்திய அரசு 200 கோடி உருபா செலவிட்டால், தமிழின் வளர்ச்சிக்காகவும் இந்திய அரசு 200 கோடி உருபா செலவிட வேண்டும். ஆனால், இந்திய அரசு தமிழனிடமிருந்து பலகோடி உரு-பாக்களை வரியாகத் தண்டிச் சென்று, இந்தியின் வளர்ச்சிக்காகச் செலவிட்டு விட்டுத் தமிழக அரசே தமிழின் வளர்ச்சிக்கான செலவு களைச் செய்யட்டும் என்று சொல்கிறது. தமிழகத்தின் பணத்தில் பலகோடி உருபாக்களை இந்தியின் வளர்ச்சிக்காக வாரியிறைத்த பின், தமிழகம் எப்படித் தமிழின் வளர்ச்சிக்காக இன்னும் பல கோடி உருபாக்களைச் செலவிட முடியும்? நம் பணத்தால் இந்தி வளர்கிறது. நாமோ அடிமைகளாய் தமிழுக்கும், தமிழ் மக்களுக்-கும் நல்லது செய்யப் பணமில்லாமல் நலிந்து படுகிறோம். இந்திய அரசு இப்படிச் செய்வது எத்துணை கரவானது, திருட்டுத் தன மானது. (''நாம் எல்லாம் இந்தியர்'' என்றும் ''இந்திய ஒற்றுமை'' என்றும் நினைக்கின்ற தமிழர்கள் சிந்திக்க வேண்டும்.)

இவ்வாறாக இந்திய அரசு நடத்துகின்ற சிறந்த கல்விச் சாலை-களிலே நுழைவுத் தேர்வுகள் நடத்தவும், இனி அடுத்த படியாகப் பயிற்று மொழியாகவும் இந்தி அமையுமேயானால், அதனால் தமிழ-ருக்கு விளையும் ஏதங்கள் பலப் பல. தமிழ் மாணவர்கள் எவ்வளவு தான் இந்தி படித்தாலும், இந்தியைத் தாய் மொழியாகக் கொண்ட இந்திக்கார மாணவனுக்கு இணையாக முடியாது.

மாந்தர் தம் மூளைத் திறமையை ''அறிவுத்திற எண்'' (Intelligence Quotient (I.Q.) ) என்ற அளவை மூலம் அளவிடுவ-

துண்டு. ஒரே அளவு அறிவுத்திற எண் படைத்த ஓர் இந்திக்கார மாணவனையும், தமிழ் மாணவனையும் எடுத்துக் கொள்வோம். எடுத்துக் காட்டாக, இருவருக்கும் அறிவுத்திற எண் 120; (I.Q. =120). தமிழ் மாணவன் பல ஆண்டுகளாக இந்தி படித்து, இந்தியில் நல்லபடியாகப் பேசவும், எழுதவும் கற்றுக் கொண்டான் என்று வைத்துக் கொள்வோம். இவ்வாறாக இந்தி படித்த தமிழ் மாணவனும், இந்தியைத் தாய் மொழியாகக் கொண்ட இந்தி மாணவனும் இந்தி மொழியில் நுழைவுத் தேர்வோ, பட்டம் பெறுவதற்கான தேர்வோ எழுதினால், தமிழ் மாணவனைவிட, அவனுக்கு இணையான (சமமான) அறிவுத் திறனுடைய இந்திக்கார மாணவன் அதிக மதிப்பெண் பெறுவான் என்பது திண்ணம்; ஏனெனில் இந்தி அவன் தாய் மொழி. இந்தியிலோ ஆங்கிலத்திலோ அத் தேர்வுகளை எழுதலாம் என்றிருந்து, தமிழ் மாணவன் ஆங்கிலத்திலும், இந்திக்கார மாணவன் இந்தியிலும் விடை எழுதினார்கள் எனக் கொள்வோம். அந் நிலையிலும், தமிழ் மாணவனும், இந்திக்கார மாணவனும் ஒரே அறிவுத்திறன் படைத்தோராயிருந்தாலும், இந்திக்கார மாணவனே அதிக மதிப்பெண்கள் பெறுவான். ஏனெனில் இந்தி அவன் தாய் மொழி. ஆங்கிலமோ தமிழனுக்கு வேற்று மொழி. மாணவர்கள் தம்தம் தாய் மொழியிலேயே விடை எழுதலாமென்றிருந்தாலும் கூட, தமிழ் மாணவன் தமிழில் நல்லபடியாகப் விடையெழுத முடியாது; இந்திக்கார மாணவனே அதிக மதிப்பெண் பெறுவான். ஏனெனில், நல்ல படியாக விடையெழுதுவதற்குத் தேவையான அறிவியல், பொறியியல் பாடப் பொத்தகங்கள் தமிழில் இராது; ஆனால் தமிழினிடமிருந்து தண்டிச் சென்ற வரிப்பணத்தில் பல கோடி உருபாக்களைச் செலவிட்டு இந்திய அரசு இந்தியில் பல அறிவியல், பொறியியல் நூல்களை எழுத வைத்துள்ளது.

இவ்வாறாக இந்திய அரசு நடத்தும் கல்வி நிலையங்களில் இந்தி நுழைவுத் தேர்வு மொழியாகவோ, பயிற்று மொழியாகவோ அமையுமானால், தமிழ் மாணவர்கள் (அவர்கள் இந்தி படித்தாலும் கூட) படிப் படியாகக் கீழ்ப் படுத்தப் படுவார்கள்; இன்னும் பத்து, இருபதாண்டுகளில் நல்ல அதிகமான சம்பளம் தரக் கூடிய அறிவியல், பொறியியல், மருத்துவவியல் தொடர்பான வேலைகள் மிகப் பெரும்பான்மையாக இந்திக் காரருக்கே போகும். இதே நிலைதான் தில்லி அரசின் (நடுவண் அரசின்)வேலைகள், தில்லி அரசு நடத்தும் வைப்பகங்கள்(banks), தொழிற்சாலைகள், கல்லூரிகள், பள்ளிகள் ஆகிய எல்லாத் துறைகளிலும் ஏற்படும்; தமிழர்கள் (இந்தி படித்தாலும் கூட) படிப்படியாகக் கீழ் நிலைக்குத் தள்ளப்பட்டு, தமிழ் நாட்டின் பொருளியல் நிலை, வாழ்க்கை வசதிகள் மேலும், மேலும் குறைந்து படும்;

இந் நிலையை மாற்றுவதெப்படி? இந்தியை எதிர்த்துப் போராடலாமா? இந்தி இந்தியத் துணைக் கண்டத்தில் நன்றாக வேரூன்றி விட்டது; இன்று இந்திக்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்-

கள் தமிழர்கள் மட்டும் தாம். பிற இந்தி பேசாத மக்கள் இந்தியை ஏற்றுக் கொண்டு விட்டார்கள். இந் நிலையில் தமிழர்கள் எவ்வளவுதான் இந்திக்கு எதிர்ப்புத் தெரிவித்தாலும், இந்தியை அகற்றி விட முடியாது.

இந்திய மொழிகளெல்லாம் (தமிழ் உட்பட) இந்திய அரசின் ஆட்சி மொழியாக வர வேண்டுமென்று சிலர் சொல்கிறார்களே? அது நிறைவேறுமா? இந்திய அரசியற் சட்டம் (constitution of India) இந்தியை ஆட்சி மொழியென்று குறிப்பிடுகிறதே தவிர, பிற மொழிகளை ஆட்சிமொழியாகக் குறிப்பிடவில்லை. இந்திய மொழிகளெல்லாம் ஆட்சி மொழியாக வேண்டுமென்றால், இந்திய அரசியல் சட்டம் திருத்தப்பட்டாக வேண்டும். ''இந்தி பேசாத மக்கள் இசைவு தெரிவிக்கும் வரையில் ஆங்கிலமும் இந்தியுடன் ஆட்சி மொழியாக நீடிக்க வேண்டும்'' என்று கூட இந்திய அரசியல் சட்டம் திருத்தப் படுவதை எதிர்க்கின்ற இந்திக்காரர்கள், ''எல்லா இந்திய மொழிகளும் (15-க்கு மேல்) இந்தியாவின் ஆட்சி மொழியாக வேண்டும்'' என்று அரசியல் சட்டத்தைத் திருத்த முன்வருவார்கள் என்று நினைப்பது பகற்கனவு. ஒரு சில தமிழகத் தலைவர்களைத் தவிர, வேறெந்த மாநிலத்தவரும் (இந்தி பேசாத மாநிலங்கள் உட்பட) இக் கோரிக்கையை எழுப்பவில்லை. ஒரு சில தமிழகக் கட்சிகளைத் தவிர வேறெந்த கட்சியின் தலைவராவது இக் கோரிக்கையை ஆதரிக்கவில்லை. கடந்த ஆண்டுவரையிலும் (1989 வரையிலும்) தில்லி அரியணையில் அமர்ந்திருந்த பேராயக் கட்சி அரசானாலும் சரி, இப்போது ஆட்சிக் கட்டிலில் உட்கார்ந்திருக்கும் சனதாதல்-தேசிய முன்னணி அரசானாலும் சரி, இக் கோரிக்கையை ஆதரிக்கவில்லை. ''இந்திதான் இந்தியாவின் ஆட்சி மொழி. வேண்டுமானால் இன்னும் கொஞ்சகாலம் ஆங்கிலமும் இந்தியுடன் ஆட்சி மொழியாக நீடிக்கட்டும்'' என்றுதான் முன்னாளைய பேராயக் கட்சியின் தலைமையமைச்சர்களான நேருவும், இலால் பகதூர் சாத்திரியும், இந்திராகாந்தியும், இராசீவ் காந்தியும் வாயுறுதி கொடுத்தார்கள். இப்போதைய சனதா தள—தேசிய முன்னணிக் கட்சியின் (Janata Dal-National Front) தலைமையமைச்சர் வி.பி.சிங்கும் இதையே தான் சொல்கிறார். ஆனால் அனைவருமே அவ் வாக்குறுதிக் கொப்ப இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்த மறுக்கிறார்கள். இந்தி திணிப்பில் எல்லா வட இந்தியக் கட்சிகளும் ஒட்டு மொத்தமாக ஈடுபட்டிருக்கும் இந் நிலையில், தமிழகம் தவிர பிற தென் இந்தியத் தலைவர்களும் இந்தியை ஆட்சி மொழியாக ஏற்றுக் கொண்டிருக்கும் நிலையில், எல்லா இந்திய மொழிகளும் இந்தியாவின் ஆட்சி மொழியாக வந்திடும்படி அரசியல் சட்டம் திருத்தப்படும் என்பது வீண்கனவு. நடைபெறாது.

ஆக மொத்தம், எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால் இந்தியாவின் ஆட்சி மொழி இந்திதான் என்பது, யார்தான் தமிழக மாநில ஆட்சியைக் கைப்பற்றினாலும், யார்தான்

நடுவண் அரசின் (தில்லி அரசின்) ஆட்சியைக் கைப்பற்றினாலும் மாறவே மாறாது.

இந்தியை அகற்றிடவும், இந்தித் திணிப்பால் தமிழருக்கு ஏற்படுகின்ற, ஏற்படவிருக்கின்ற பொருளியல் வீழ்ச்சிகளைத் தடுக்கவும் ஒரே வழி நாம் இந்திய ஆட்சியினின்று (தில்லி ஆட்சியினின்று) விடுபட்டு, விடுதலை பெற்ற தமிழகம் பெறுவதுதான்.

உண்மையிலேயே இந்தித் திணிப்பை எதிர்க்கின்ற மெய்த் தமிழ் நெஞ்சங்கள், அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்திருந்தாலும் சரி, அல்லது கட்சிச் சார்பற்றிருந்தாலும் சரி, தமிழக விடுதலைக்காகப் பாடுபடுவார்களாக! விடுதலை பெற்ற தமிழகம் ஒன்றுதான் நமதும், நமது பிள்ளைகள், பேரப்பிள்ளைகளின் வருங் காலத்தையும் பாதுகாக்க வல்லது!

விடுதலை பெற்ற தமிழகம் பெறுவோம்—தமிழர் தம்
வருங்காலத்தைப் பாதுகாத்திடுவோம்!

# தமிழும் திராவிடமும்.

திரவிடக் குடும்பம் என்னப்பெறும் தமிழியக் குடும்ப மொழிகளுக்குத் தாயாக மட்டுமல்லாமல், உலக மக்கள் தொகையில் ஏறத்தாழ சரிபாதியரான 200 கோடி மக்களால் பேசப்பெறும் இந்தையிரோப்பிய மொழிக் குடும்ப மொழிகளின் பெருக்கத்துக்கான மூலக் கருநிலைகளை அளித்துதவிய மூலமொழியாகவும் இத் தமிழ் இலங்குகின்றது.

வடகொரியாவிலும்,—தென்கொரியாவிலும் உள்ள ஐந்து கோடிக் கொரியன் மொழியராலும்,—சப்பானில் உள்ள பத்து கோடிச் சப்பானியராலும் பேசப்பெறும் மொழிகள் திரவிடச் சார்புடையனவாக ஆங்குள்ள மொழியறிஞர்கள் சிலரால் ஆய்வு மேற்கொள்ளப் பெற்று வருகின்றது.

ஆத்திரேலியப் பழங்குடி மொழிகளும், இசுப்பெயின் நாட்டின் வடகிழக்கிலும் பிரஞ்சு நாட்டின் தென்மேற்கிலும் வழங்கும் 'பாசுக்கு' மொழியும், திரவிட மொழிச் சார்பினவென்று மொழியறிஞர்கள் அறியத் தொடங்கியுள்ளனர்.

இவை தவிர-உலக மொழிக் குடும்பங்கள் பலவற்றிற்கும் தமிழ்மொழி அளித்துள்ள கொடை மிகமிகப் பெரியது என்னும் உண்மை முகில் மூட்டத்தின் அப்பால் தோன்றும் கதிரவ ஒளி போல் காட்சியளிக்கின்றது. —சொல்லாய்வறிஞர் ப. அருளி
நூல் 'பெற்றோரைப் பற்றி'

உறுப்பினர்களைச் சேர்த்து உதவுங்கள்!

தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் இதழ்களை நிறுத்த வேண்டாம் என்று எழுதும் அன்பர்கள் ஒவ்வொருவரும் பத்து உறுப்பிர்களைச் சேர்ப்பது என்று உறுதி பூண்டு விட்டால் எவ்வளவு பயனுடையதாக இருக்கும்! எண்ணிப் பாருங்கள்; செயல்படுங்கள்!

# உலகின் ஏதோ ஒரு மூலையில் இருக்கின்ற என் காதலிக்கு!

ஒடவை. தமிழ்வேந்தன்

(ஒடவை தமிழ்வேந்தன் எழுதிய 'கண்ணாடி நினைவுகள்' என்னும் உரைப்பா நூல், புதுமையான கற்பனையையும் அருமையான கருத்துகளையும் கொண்டது. பாவலனின் கற்பனையில், தமக்கு வந்து வாய்க்கின்ற மனைவி எப்படி அமைய வேண்டும் என்னும் கருத்தில், அவரின் தமிழ், இன நலக் கொள்கைகளைச் சொல்வதும், அவர் மனத்தில் மென்மையான அன்புணர்வுகளை வெளிப்படுத்துவதும் அழகு! அழகு! தமிழ் உணர்வும் இளமை வளமும் ஒழுங்கு நலமும் கொண்ட நெஞ்சங்கள் படித்து மகிழ வேண்டிய நூல், இது! மாதிரிக்குச் சில உரைப்பாக்களை இங்கே தருகிறோம். தேவையானவர்கள் பெற்றுப் படியுங்கள், விலை: 3.00., பக்கம்: 32 கிடைக்குமிடம்: தென்னர் பதிப்பகம், 255 ஆர்-3, திருவள்ளுவர்சாலை. ஒட்டன்சத்திரம்-624619.)

குறிப்பு: உரைப்பா வடிவங்கள் உரை வடிவங்களாக இங்கு அச்சிடப் பெறுகின்றன.)

○ உலகின் ஏதோ ஒரு மூலையில், எங்கே இருக்கின்றாய் என்று இன்னும் எனக்குத் தெரியாத, ஆனாலும், என்னுள் தமிழைப் போலவே இணைந்து கலந்து நிறைந்து இருக்கின்ற என் காதலிக்கு...

○ என் இனிமையே...
நீ இந்த உலகப் பந்தில் எந்த நாட்டில் எந்த மூலையில் எந்த ஊரில் எந்த வீட்டில் பிறந்திருக்கிறாயோ... நான் அறியேன்!
நீ எந்த மதத்தில் எந்தச் சாதியில், வண்ணம் பூசப் பெற்றுள்ளாயோ... அதுவும் அறியேன்!
நீ, குயில் போலக் கருத்தவளா?
கொத்துக் கிளியின் கூரிய மூக்கைப்போல் சிவந்தவளா?
குட்டையாய் இருக்கின்றாயோ? அல்லது ஒட்டகச்சிவிங்கி போல் நெட்டையாய் இருக்கின்றாயோ?
இவற்றைப் பற்றியெல்லாம் நான் கவலைப்படவில்லை!
ஆனாலும், நான் உன்னைக் காதலிக்கின்றேன்;

○ காதல், மாந்தர்களை மட்டுமன்று,
உயிரினங்களையே உலுக்குகிற பேராற்றல்!
நெஞ்சத்தின் மூலையில் உறவாடும் நிலவுகளின் நிழல்!
வாழையடி வாழையாய் வளர்கின்ற தலைமுறையின்
வாழ்கின்ற உயிர்த்துடிப்பு!
எரிமலைகள், பெரும்புயல்கள், இவற்றால்
காலங்காலமாய் அழிக்க முடியாத மெய்ம்மம்!

○ காதலெனும் கடலில் கரைசேர முடியாத சிலர்
'கற்பனை' என்கின்றனர்!
நீந்திச் சோர்ந்த சிலரோ 'கனவு' என்கின்றனர்?
காதல் ஒரு 'கானல்நீர்' என்போரும் உண்டு!

மயக்கத்தில் இருப்போர்க்கு 'மாயை' தான்!
உறக்கத்தில் இருப்போர்க்கு 'கனவு' தான்!
என்னைப் பொறுத்தவரை, 'காதல்'—
இனிமையின் தேன் ஊற்று!
வாழ்வு மாளிகையின் அடித்தளம்!
எண்ணங்களின் ஏணி!
கால ஆழியில் கரைசேர்க்கும் துடுப்பு! உலகாளும் உயிர்ப்பு!
'கண்டேன் காதல் கொண்டேன்' என்பார்கள்!
நானோ, உன்னைக் காணாமலேயே காதலிக்கின்றேன்!
புலவர்கள் பெண்களைப் பாடும் புதுமைபோல்,
நா மொட்டில் தேன் சொட்டும் இனிய குரல்!
வானத்துக் கருமுகில்போல் வனப்புமிகு நெடுங்கூந்தல்?
துள்ளும் மீன்களைப் போல் துவளாத மான் விழிகள்!
மாம்பழக் கன்னங்கள் மயக்கும் பேரழகு!
வாழையிலைத் தோள்கள்! வளமார்ந்த இளங் கைகள்!
கொடியொன்று அசைவது போல் துடிபோன்ற இடையழகு!
பட்டுப்பூம் பாதங்கள்! பயில்கின்ற நடையழகு!
இவையெல்லாம் உனக்கு
இருக்கிறதா என்ற கனவுகளில்
ஏங்கித் தவிக்கவில்லை! எனினும்
நான், உன்னைக் காதலிக்கின்றேன்!
என் கன்னலே!
உன்னை மணந்து கொண்டால்,
விலையுயர்ந்த மாணிக்கங்கள், வைர அட்டிகைகள்,
வெள்ளி ஏனங்கள் வீட்டு ஆவணங்கள்,
வயல்கள், மலைத் தோட்டங்கள்,
புத்தாடைகள், மோதிரங்கள்,
இரண்டு சக்கர மிதியுந்தும் நான்கு சக்கர மகிழுந்தும்
பரிசுகளாய்க் கிடைக்கும்—என்ற
வரவுக் கணக்குப் பார்க்கும்—
எதிர்பார்ப்புகள் எனக்கு இல்லை!
என்றாலும், நான் உன்னைக் காதலிக்கின்றேன்!
இளமை ஊர்வலம் போகின்ற
திருவிழா நாள் தெருக்களிலே, நாம்
ஊரார்க்குத் திரிய வேண்டுமென்றோ,
சாலையில் செல்லும் என்னை, சாளரத்தின் ஓரம் நின்று, நீ,
எத்தனைப் பேர் இருந்தாலும், நாம்
இருவர் மட்டுமே புரிந்துகொள்ளுகிற குறிப்பு மொழி பேசிக்
கூப்பிட வேண்டுமென்றோ...
ஊருக்குள் நமைப்பற்றி ஒரு பேச்சு உருவாகிக்
காதலெனும் தேருக்கு, வடம் இழுக்கும் திருவிழா சிலர் செய்ய
அடிப்படைகள் உருவாக்கும் அலர் வளர வேண்டுமென்றோ,
நான் விரும்பவில்லை; ஆனாலும்...
நான்... ஆம்...
உன்னைக் காதலிக்கின்றேன்!

சரி... இ'து என்ன காதல்?
எதிர்பார்ப்புகள் இல்லாத காதல்
இனிமையில்லாது போய் விடுமே... என்கிருயா?
என் எதிர்பார்ப்புகள் இவையல்ல...
எழுத்துகளுக்குள் சுருங்கிவிடும் அளவுக்கு
அவை எளிமையானவை அல்ல... ஆம்...
வாழ்ந்து காட்டித்தான் அந்த வரலாற்றை எழுத வேண்டும்!
அந்த வழியின் துணையாக நீ வர இருப்பதனுல்தான்
நானே நீயாய்... நீயே நாருய்... ஆவோம்!
நீ எங்கோ இருந்தாலும், என்னுள் இருக்கின்ற, என்
எண்ணங்களின வெளிப்பாடாய் இருக்கிருய்!
எனவேதான் நான் உன்னைக் காதலிக்கின்றேன்!
இந்த உலகில் நம் காதலுக்குத் தடை சொல்லி,
நயைப் பிரித்து வைக்க, இடையில் தோன்றிய
சாதிககோ, மதத்திற்கோ ஆற்றல் இல்லை!
ஏன்... சட்டத்திற்கும் வேறு யாருக்குமோகூட
அதிகாரம் இல்லை.

என், இல்வாழ்வைப் பல்கலைக் கழகமாய்
உருவாக்கி ஒத்துழைக்கும் ''துணைவேந்தர்'' பதவியில்
உன்னை அமரவைக்கப் போகிறேன்!
என், தனிவாழ்வைத் தழைக்கச் செய்யும் 'தலைவி'
எனும் பொறுப்பை உன்னிடத்தில் ஒப்படைக்க இருக்கிறேன்
என் பொதுவாழ்வைப் புகழ்வாழ்வாய் ஆக்கும்
அமைச்சரவையில் உன்னைத்தான்
'முதலமைச்சரா'க்க முடிவு செய்திருக்கிறேன்!
இப்படிப் 'பதவி'ப் பொறுப்புகளுக்கு முடிவு செய்தது உன்னைத்
தடை செய்யவோ. தளை செய்யவோ, அல்ல...
'ஆணுக்குப் பெண் அடிமையல்லள்' என்ற
அய்யா தந்தை பெரியாரின் முடிவை
நடைமுறையாக்கத்தான்!

'என் வாழ்வில் விளக்கேற்ற வர இருப்பவளே!'
—என உன்னை அழைக்க மாட்டேன்.
ஏனெனில்,
நான் இரவை எதிர்பார்த்து இருக்கவில்லை!
கனவுகளை விட நனவுகளையே நம்புகிறவன் நான்!
இரவைவிட பகலைத்தான் விரும்புகிறேன்!
இரவின் இருள்போலப் பகலிலும் பார்வையை மறைக்கிற
அறியாமைக் காரிருளுக்குள் ஆழ்ந்து கிடக்கும்
இந்த உலகை நாம் எழுப்பியாக வேண்டும்!
புதுமை மலரவைக்கப் போராடும்—
புரட்சிக்குப் பண்பாடும்,
வைகறைப் பறவையே, வா
என்று அழைக்கின்றேன்!

# அத்திப்பூ

நாடகம்
(பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் பாவியக் கொத்தில் ஒரு மலர்.)

## நாடக ஆக்கம் -அதியமான்

முன்னுரை:

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் பாவியக் கொத்தில் முதல் காதையே அத்திப்பூ. இதனை ஐயா அவர்களின் விருப்பப்படி நாடகமாக்கத் துணிந்துள்ளேன். இதற்கு முன் 'வழக்குரை காதை' நாடக ஆக்கத்தைப் படித்து விட்டீர்கள். அதன் தூண்டலே, ''அத்திப்பூ'' நாடகமாக்கப் பெறுகிறது. அத்தி பூக்காது எனக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால், இப்பாவியத்தில் அத்தி பூக்கிறது. தலைப்புக் கேற்ற இதன் சாரம் குற்றமன்னிப்பு.

எவரும் செய்ய இயலாத அரிதான செயலை இக் கதைத் தலைவன் செய்து முடிக்கிறான். ''அத்தலைவனுக்குப் பெயர் இன்னது என்பதாகப் பாவியத்துள் எங்கணுமே சுட்டாத நிலை. பாவிய அமைப்புக்கும், கருத்துக்கும் ஓர் உச்ச ஏற்றச் சிறப்பாகவே உள்ளது'' என்று திரு. அருளி அவர்கள் 'பாவிய நுழை வாயில்' உரையில் குறிப்பிடுவதைப் பார்த்துத் திகைப்பு ஏற்பட்டது. நாடகத்திற்கு உறுப்பினர் மிகத் தேவை என்பதால்.

எனவே நானாகவே ஒரு பெயரை வைத்து எழுதலாமா என எண்ணிப் பார்த்தேன். திரு. அருளி அவர்களின் கூற்றுக்கு மேலாக அப்படி ஒரு பெயரைத் தலைவனுக்கு இட்டு எழுத மனம் இடந்தரவில்லை. பாவியத்திலேயே ஒரு பெயரைத் தேடிப் பிடிக்கலாம் என மீண்டும் ஒரு முறை பாவியத்தைப் படித்தேன்; பெயர் கிடைத்தது: அஃது அன்பரசு என்பதுதான். தலைவனுடைய நண்பன் முத்தப்பன் ஒப்புயர்வற்ற அத்தலைவனை, அன்பரசு என அழைக்கிறான். அதையே பாவியத் தலைவனுடைய பெயராக இந் நாடகத்தில் அமைக்கிறேன்.

பெண்ணுக்குக் கற்பு முகாமை. அது போன்று ஆணுக்குத் தேவை இல்லையோ? ''சாண்பிள்ளை ஆனாலும் ஆண்பிள்ளை'' எனப் பேசி ஆணை அணைத்துக் கொள்ளும் குமுகாயம், பெண்ணையும் ஏன் அணைத்துக் கொள்ளக் கூடாது? ஓர் ஆணாலே ஏற்பட்ட குற்றத்தைச் சுமந்து துன்புறும் கயல்விழிக்கு வாழ்வளிக்கிறது பாவியம். கற்பென்ற ஒரு சார்பான குற்றத்தை அடித்து நொறுக்குகிறார் பாவிய ஆசிரியர். கற்பென்ற பெண் அடிமைத் தளையை ஒடித்துக் காட்டுகிறார், கற்பிழந்தவள் என்பதற்குப் புறச்சான்று ஒன்றும் இல்லையே. நாடகத்தில் விளத்தங்கள் உண்டு. கற்பை ஒழுக்கம் என எடுத்துக் கொண்டால் கற்பிழக்கும் ஆணை மன்னித்துக் குமுகாயம் ஏற்றுக் கொள்வது போன்று, பெண்ணையும் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பதான மெய்ப் பொருளே முகாமையாக நின்று பாவியம் இலங்குகின்றது.

எனவே, பாவியம் வெறும் இலக்கியச்சுவை என்றெண்ணி ஏமாற வேண்டாம். மிகச் சிறந்த சீர்திருத்தம் தெளிவாகவும், ஆழமாகவும் காட்டப்பட்டுள்ளது. கைம்பெண் ஒருத்தியை மறுமணஞ் செய்வித்து வாழவைப்பது போன்று, கற்பிழந்தவள் என்று கூறி ஒதுக்காமல் வாழ்வளிப்பது மிகச் சிறந்த செயல். அச்செயலைத்தான் ஆசிரியர் குமுகாயத்திற்கு அறிவுரையாகக் கூறுகிறார். இப்பாவியத்தில் அதுவே கருப்பொருள். உயிர்த்-துடிப்பு.

இனி நாடகம் ஓடும்.

காட்சி 1

உறுப்பினர்: கயல்விழியின் தாய், கயல்விழி, பெரியோர் மூவர்.

இடம்: வீடு

காலம்: காலை

நிலை: கயல்விழி கவலையோடு கன்னத்தில் கையை வைத்துத் தனியறையில் அமர்ந்திருக்கிறாள். கயல்விழியின் தாய் வேறு அறையிலிருந்து அழைக்-கிறார்.

கய. தாய்: கயல்விழி... கயல்விழி!

க. வி: என்னம்மா? ஏன்? என்ன வேண்டும்?

கய. தாய்: எனக்கொன்றும் வேண்டேன். என்பக்கம் வா.

க. வி: எதற்காம்?

கய. தாய்: கூப்பிட்டால் வாயேன். என்ன என்பதை பிறகு சொல்லுகிறேன்.

க. வி: (எழுந்து தாயின் பக்கம் செல்லுகிறாள்) என்-னம்மா?

கய. தாய்: அடுத்த அறையில் பெரியோர் கூடி உன் திருமணம் பற்றிப் பேசுகிறார்கள், அதை நீயும் கேட்டுக் கொள்ள வேண்டும் என்பதால் உன்னை ஆவலோடு இங்கு அழைத்தேன்.

க. வி: சில காலமாக ஆண் என்றாலே பிடிக்கவில்லை-யம்மா.

கய. தாய்: ஏன்?

க. வி: இந்தக் குமுகாயம் ஆண்களுக்கு ஒரு நெறி, பெண்-களுக்கு ஒரு நெறி பேசுகிறதே: அதனால்...

கய. தாய்: என்ன செய்வது? எத்தனையோ செம்மல்கள் பெண்களுக்காகப் பரிந்து பேசியும் இன்னும் பெண்-கள் நிலை மாறவில்லை. என்ன செய்வது. நல்லவர்-கள் ஒரு சிலரும் உண்டு; சரி. சரி அங்கு பேசு-வதைக் கவனி.

காட்சி மாற்றம்

பெரி-1: அன்பரசன் அழகுடையவன்; செல்வமும் உண்டு: அவற்றைவிட அவனைப் பற்றிச் சிறப்பாகக் கூற

வேண்டுமானால் அவன் அருளும் அறிவும் உடை-யவன், அதனால்தான் கயல்விழிக்கு ஏற்றவன் என்று நான் தேர்ந்து தெளிந்து சொல்லுகிறேன்.

பெரி-2: கயல்விழி எங்கள் குடும்பத்தில் நல்ல அறிவுடை-யவள்; கோழைக் குணம் என்பது அவளிடங் கிடையாது. துணிவாக நல்லவற்றைச் செய்து முடிக்கும் ஆற்றல் பெற்ற நல்ல அழகுப் பெண். குற்றங்களைக் களைவாளே யல்லாமல் கோழை-யாக மாட்டாள்.

பெரி-3: அதனாலேயே அன்பரசனுக்கு ஏற்றவள், கயல்-விழியே என்று இங்கு வந்தோம்.

பெரி-2: இந்த உறவு நல்லதானால் அன்பரசன் கொடுத்து வைத்தவன்தான்.

பெரி-1: ஆமாம்... ஆமாம்! அப்படியே முடிந்தால் கயல்-விழியும் கொடுத்து வைத்தவளே; ஏனென்றால், அழகு இருக்கலாம் பணம் இருக்கலாம், அருளும் அறிவும் எல்லோரிடமும் இருக்காதே!

பெரி-2: அஃது உண்மைதான். அன்பும் அருளும் அவ-னுடைய பண்பு என்பதை நீங்கள்தானே சொல்லுகிறீர்கள்: அவன் எப்படியோ? ஏனென்-றால் ஆயிரம் பொய்யைச் சொல்லி ஒரு கலியா-ணத்தை முடி என்பார்களே, அது போல...!

பெரி-1: ங்... அப்படி எண்ணாதீர்கள்; பொய்நிற்காது, மெய்தான் நிற்கும் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

பெரி-3: இந்தக் குமுகாயத்தில் பொய்யர் மிகுதி; மெய்யர் சிலரே;

பெரி-1: மெய்யர் சிலரே இருப்பதாய் நீங்கள், ஒப்புக் கொள்ளுகிறீர்கள் அல்லவா? அந்தச் சிலரில்தாம் அன்பரசனும் ஒருவன்; இன்னுங் கேளுங்கள்; ஒரு பெண்ணை ஓர் ஆணுக்கு மனைவியாக்கக் கேட்-கும் போது, அழகு, பணம், பதவி, பகட்டு, வீடு, தோட்டம், துரவு போன்றவற்றைக் கூறிக் கேட்-பார்களேயன்றி மணமகன் அன்புடையவன், அரு-ளுடையவன் என்று எவனும் இந் நாள்வரை அறி-வித்தது உண்டா? பெண்ணைக் கொடுப்பவன்கூட மணமகனிடம், பணம், பதவி, சொத்து நலங்-களைத்தான் கேட்பார்களே தவிர அவனுக்கு அறிவு இருக்கிறதா, அருள் குணம் உண்டா, என்று எவனும் இந் நாள் வரைக் கேட்டதும் கிடையாது:

பெரி-3: அது மட்டுமன்று; மணக்கொடை எவ்வளவு தரு-வீர்கள்; நகை எத்தனைக் களஞ்சு, சீர் சீராட்டு-கள் எவ்வளவு என்று கேட்டுத் துலாக்கோலும்

தட்டோடு எடைக்கற்களையும் எடுத்துக் கொண்டு தெருத் தெருவாய் அலையும் இந்த நேரத்தில், நாங்கள் பெண்ணிடம் உள்ள குணத்தைத்தான் பெரிதாக எண்ணிக் கேட்கிறோம்.

பெரி-2: அப்படியானால் கயல்விழியைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறீர்களா?

பெரி-1: ஆமாம்... ஆமாம். அவளிடம் அறிவு மிகுதி என்று கேள்வி.

பெரி-3: அது மட்டுமன்று; அன்பும் அறனும் கூடிய பண்பானவள் எனவும் கேள்வி.

பெரி-2: சரி. இதுவரை நாம் பேசியதிலிருந்து இந்த உறவு நல்லதாகத்தான் தெரிகிறது. எதற்கும் கயல் விழியிடம் நான் கேட்டுக் கொள்கிறேன். சற்றுப் பொறுத்துப் புறப்படுங்கள்.

காட்சிமாற்றம்

பெரி-2: (கயல்விழியும், தாயும் நிற்குமிடஞ் சென்று) கயல்விழி, அன்பரசனுக்கு உன்னை மணமுடிக்க எண்ணம்! அவனிடம் அன்பும் அருளும் இருக்கிறதாம்.

க. வி: பணம், பகட்டு இவற்றைப் பற்றி...

பெரி-2: அதைக்கூட அவர்கள் பெரிதாகச் சொல்லவில்லை. மணக்கொடை(வரதட்சணை)யோ, மேலும் பெண் வீட்டாரை ஒட்டாண்டியாக்கும் சீர் சீராட்டுகள் கூட வேண்டாவாம்!

க. வி: இதென்ன புதிதாக இருக்கிறது. மணக்கொடை வாங்குவது குற்றம் என்று பேசுகிறவர்களே, அள்ளி அள்ளி அளக்கிறார்கள். இவர் மட்டும் வேண்டாம் என்றால் அவர் ஒரு புதுப் பிறவிதான்.

பெரி-2: வாய்மையாகச் சொல்லுகிறேன். திருமணச் செலவு ஏதும் பெண் வீட்டாருக்கு இல்லை என்று உறுதியாகக் கூறிவிட்டார்கள்.

க. வி: அப்படியா சொன்னார்கள்?

பெரி-2: ஆமாம் கயல்விழி, ஆமாம். நீயுந்தான் கேட்டிருப்பாயே.

க. வி: கேட்டேன். அருளும், அறிவும் அவருக்கிருந்தால் எனக்கு உடன் பாடே.

பெரி-2: சரி நான் போய் கூறித் திருமணத்திற்கு ஏற்பாடுகளைச் செய்யச் சொல்லி அனுப்பலாமா?

கய. தாய்: பெண்தான் சரி என்று சொல்லிவிட்டாளே திருமணம் நல்லபடியாக நடக்கட்டும். ஒப்பி அனுப்புங்கள். 'திரை'

காட்சி 2

உறுப்பினர்: கயல்விழி, அன்பரசன், நண்பர்கள் மூன்றுபேர்; அன்பரசனின் தங்கை, அன்பரசனின் தாய்,

பெண்கள் அறுவர், சிறுவர்;
இடம்: தனி அறை, நடுஅறை; (பெண்கள் இருக்குமிடம்)
காலம்: இரவு.
நிலை: திருமணம் மாலை மாற்றுவதோடு முடிவடைகிறது; முதலிரவு தொடக்கம், கயல்விழியின் துயரம்.

அன்ப: (தன் மனத்துக்குள்)முழுநிலா வெளிச்சம் போன்று, இந்த நீலநிற மின்விளக்குகளின் ஒளி இருக்கிறது; நல்ல குளிர்மையான அறை. மெத்தைக் கட்டில், அவளின் மென்னுடல் புரள நல்ல அமைப்புத்தான். (பழ வகைகளையும் பண்டங்களையும் பார்த்து) ஓ! முக்கனிகள் குவிந்து கிடக்கின்றன. ஓகோ! அவள் கையால் எடுத்துத் தரவா? சரி சரி பண்டங்கள், அப்பப்பா இத்தனையும் நான் மட்டுந்தான் தின்று சுவைக்க வேண்டுமா? (பால் குவளையை எடுத்து) பாலும் உண்டு பருகி மகிழ, ஆனால் அவளைக் காணேமே காந்தம் பாய்ச்ச. (பலகணி வழியாக வெளியே எட்டிப் பார்த்து) அடே பையன்களா, என்ன கூச்சல் குழப்பம் ஓடுங்கடா; எங்கேயாவது போய்ப் பாடி ஆடுங்கள்; இங்கே நீங்கள் போடும் ஒலி செவியைச் பிய்க்கிறது!

சிறு-1: ஏய், புதுமாப்பிள்ளை சினக்கிறார்; வாங்கடா! அதோ அந்தப் பக்கம் போய் விளையாடுவோம். (போகிறார்கள்; சிலர் போகாமல் அவ்விடத்திலேயே விளையாடுகிறார்கள்,

காட்சிமாற்றம்

பெண்-1: (நடு அறையில் அமர்ந்து) ஆமடியம்மா, நாமெல்லாம் இங்கு அமர்ந்துப் பேசிக் கொண்டிருக்கிறோமே, முதல் இரவுக்கு மணமகனையும் மணமகளையும் அணியஞ் செய்து விட்டார்களா? இல்லையா?

பெண்-2: அவை யாவும் ஒழுங்காக நடக்கும்; நமக்கேன் அந்தக் கவலை? ஒருத்தி ஒருத்தியாக அவரவர் முதல் இரவை நினைவுபடுத்திக் கூறுங்கள்; சும்மா ஏனிருக்கவேண்டும்? அதைக் கேட்டுக் கொண்டே இருக்கலாம்;

பெண்-3: போடியம்மா போ; அஃது இப்போது முகாமையா? (இரண்டாவது பெண்ணைச்சுட்டி)நீ போய் முதல் இரவு அறை திறந்திருக்கிறதா, உள்ளே இருவரும் இருக்கிறார்களா எனப் பார்த்து வா.

பெண்-2: எனக்கா சொல்லுகிறாய்?

பெண்-3: ஆமாம்; உன்னைத்தான்;

பெண்-2: (எழுந்து போகிறாள்;—பார்த்துவிட்டு வந்து)

அடியம்மாடி! அறைக்குள்ளே, மணமகன் மட்டுந்தான் குரங்கு மாதிரி கட்டிலிலே அமர்ந்திருக்கிறார்; மணமகளைக் காணோமே (எல்லோருமே சிரிக்கிறார்கள்.)

பெண்-4: இன்னும் அனுப்பவில்லை போலும்! சரி அந்தப் பொறுப் பேற்றவர்கள் அதைச் செய்வார்கள்.

அன்ப: (மனத்துக்குள்) திருமணத்திற்கு வந்த பெண்களுக்கு இருக்கும் அக்கறைகூட கயல்விழிக்கு இல்லையே. சரி வரட்டும் (கட்டிலில் சாய்கிறான் பெண்கள் பேசுவதைச் செவிமடுக்கிறான்.)

பெண்-5: (1-ஆவது பெண்ணைப் பார்த்து) எங்கே பார்த்துக் கொண்டிருக்கிறாய்? இங்கே கவனி; உனக்குத் தலைநாள் இரவு எப்படி இருந்தது?

பெண்-1: என்னையா சொல்லச் சொல்லுகிறாய்?

பெண்-6: ஆமாம் உன்னைத்தான் அவள் சொல்லுகிறாள்!

பெண்-1: அப்போது...

பெண்-5: எப்போது?

பெண்-1: எனக்குத் திருமணமாவதற்கு முன்னால்...

பெண்-5: ங். சரி.

பெண்-1: ஆண்கள் என்றால் பிடிக்காது. ஏன் தெரியுமா? அவர்கள் வைத்திருக்கும் மீசையைக் கண்டு அச்சம். பூனை மாதிரி பதுங்குவேன்.

பெண்-5: ஏன்? புலி மாதிரி பாய்வதற்கா.

பெண்-1: நீ சொன்னதைப்போல, தலைநாள் இரவன்று அவரை முதல்முதல் கண்டதும் புலி மாதிரி பாய்ந்தேன்.

பெண்-5: ங்...சரி. அவர்?

பெண்-1: பூனையானார்.

பெண்கள் அனைவரும்: (சிரிக்கிறார்கள்)

பெண்-1: (2-ஆவது பெண்ணைப் பார்த்து) உன்னுடைய தனி இரவு...

பெண்-2: அன்றைக்கு அவர் என்னைப் பார்த்துவிட்டு என்னடி ஆனைமாதிரி இருக்கிறாய் என்று பகடி செய்தார். அந்த அளவிற்கு நன்றாக உருண்டு திரண்டு இருந்தேன். எல்லோருமே என்னை ஆனைக்குட்டி என்றுதான் சொல்லுவார்கள்.

பெண்-6: அப்படியா? இப்பொழுது ஏன் அருகம்புல் மாதிரி ஆகிவிட்டாய்?

பெண்-2: எல்லாம் அவரை நினைத்து நினைத்துத்தான்.

பெண்-6: ஓகோ. ஐயா உலகம் சுற்றும் காளையா? ஏனடி அவருக்கு என்ன வேலை?

பெண்-2: அரசியல் வழக்கர்.

பெண்-6: அப்படிச் சொல்லு. அடியம்மா யாரையும் நம்பலாம். இந்த அரசியல் வழக்கரை நம்பவேமுடியாது.

(தொடரும்)

பெற்ற கூட்டமொன்றில், பள்ளியில் நடைபெற்றதில் 'பாரதியின் தமிழுணர்வு போலியே' என்ற கருத்தினைக் கூறினேன். (அண்மையில் தென்மொழியில் வந்த கருத்துகளின் சுருக்கமாக) இங்ஙனம் எனது பணியை என்னால் இயன்ற வகையில் எதிர்ப்புகளுக்கிடையில் செய்து வருகிறேன். நான் ஆற்ற வேண்டிய செயல் என்னவென்பதை இதுவரை தாங்கள் இனங்காட்டவில்லை. இனங் காட்டுவீர்கள் என எண்ணுகிறேன்.

தாங்கள் இதுவரை எழுதிய நூல்களின் மொத்த விலையினைக் குறிப்பிட்டனுப்பினால் தொகை அனுப்பிப் பெற்றுக் கொள்ளமுடியும். அன்பு கூர்ந்து அனுப்புங்கள். நானும் படித்து மற்றவர்களையும் படிக்க வைக்கமுடியும். நமது கருத்துகளுக்கு ஆதரவாக மாணவக் குமுகாயத்தினரிடம் எழுச்சியை ஏற்படுத்தலாம்.

20-02-90-இல் நான் பத்தொன்பதாம் அகவையில் காலடி வைக்கிறேன். இது நாள் வரை பிறந்த நாள் எனக் கூறி எவரிடமும் வாழ்த்துப் பெற்றதில்லை. ஆனால் இவ்வாண்டு என் இனவுணர்வுகள் மிக்க தீவிரமடைந்த ஆண்டு. அஃது மேலும் தொடர, எனது பணி சிறப்படைய தங்களின் வாழ்த்துகளை எதிர் நோக்குகிறேன். நன்றி! அன்புடன்,

—ச. த. கார்த்திகேயன். திருவூர், செங்கை-அண்ணா

(ஆசிரியர் குறிப்பு: தம்பி! உங்களை உருவாக்கிய தென்மொழியின் கருத்துகளை எங்கணும் பரப்ப அறிவும் மனமும் ஆள்வினையும் வளர்ந்து சிறக்க வாழ்த்துகின்றேன். —ஆசிரியர்.)

○ : *1405:* பேரன்பு மிக்கீர்! வணக்கம். தமிழ்த் தொண்டே தம் தொண்டெனவும், தமிழ்த் தொண்டில் தனித் தொண்டெனவும், தளராது நாள் தோறும் ஆற்றிவரும் அரும்பணிக்கு எம் உள்ளங்கனிந்த போற்றுதலையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று போல் என்றும் ''தென்மொழி'' வெளி வந்து நாட்டுக்கும், குமுகாயத்துக்கும் பயன்பட வேண்டி முடிக்கின்றேன். அன்புடன்,

—பி. சி. கணேசன்
தலைநகர்த் தமிழ்ச் சங்கம், சென்னை-45.

○ : *1406:* நற்றமிழ் நலம் போற்றும் நல்லீர், நனி வணக்கம். சென்னை மாநகரில் உள்ள 27 தமிழ் மன்றங்களின் ஒருங்கிணைப்புக் கூட்டம் தங்கள் தலைமையில் நடந்த செய்தியும், 'தமிழ்க் காப்புக் குழு' அமைக்கப் பெற்ற செய்தியும், மறைமலை நகர் தொடர்வண்டி, நிலையத்திற்கு மறைமலை பெயரே வைத்தல் வேண்டும் என்னும் போராட்டத்திற்குத் தாங்கள் தலைமை ஏற்கும் செய்தியும், முரசொலி இதழில் படித்து நெஞ்சம் மகிழ்கிறது. ''தமிழா ஒன்று சேர்; தமிழால் ஒன்றுசேர்; தமிழுக்காக ஒன்று சேர்'' என்பதற்குச் சான்றாக இந்த நிகழ்ச்சி அமைந்துள்ளதை எண்ணி ஆறுதல் பெற முடிகிறது. தமிழ் மொழிக்கு, தமிழ் மக்களுக்கு, தமிழ் நாட்டுக்குக் 'காங்கிரசு'களை என்பதை நன்கு தெளிந்தே தந்தை பெரியார் ''காங்கிரசு ஒழிப்பு'' என்பதைக் கொள்கையாகக் கொண்டு மக்களிடையே பரப்பினார். அதன் விளைவு ஆட்சியிலிருந்து அ'து அகற்றப்பட்டது. ஆனால் தமிழ் நாட்டின் பொது வாழ்விலிருந்து முற்றிலும் ஒழிக்கப்படவில்லை. அதன் விளைவு தமிழாக விளங்கும் மறைமலை மீது கரிநெய் (தார்) பூசும் துணிவு வந்துள்ளது. தங்கள் எழுத்தும் பேச்சும் தொண்டும் தமிழ் மொழிக்காக தமிழர்களை ஒன்று சேர்க்கும் என்பதற்குத் தமிழ்க் காப்புக் குழு தக்க சான்றாக உள்ளது. நனி நன்றி. தங்கள் அன்புள்ள —வ. வேம்பையன், கல்பாக்கம்.

○ : *1407:* பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய தமிழர்களின் உரிமைக்குரலாக உணர்வின் உருவாகத் திகழும் அய்யா பாவலரேறு அவர்கட்குப் பணிவான வணக்கம்.

கடந்த 10-ஆம் பக்கல் தமிழர் மானம் காத்திடவும் தமிழறிஞர் புகழ் ஓங்கிடவும் தங்களது தலைமையில் தொடர்வண்டி மறியல் நடைபெறவிருந்ததை அறிந்து மிகவும் மகிழ்ந்த அதே வேளையில், இதுவரை தாங்களும் தங்களின் இல்லத்தார் யாவரும் தமிழ் நலனுக்காகச் செய்த அளப்பறிய ஈ(தியா)கங்களைத் தமிழர் உணரவில்லையே என்ற வருத்தமும் அடைந்தேன்.

தமிழ்மொழி—தமிழ்நாடு, தமிழினம் என்ற உணர்வுகளைப் புதைத்துவிட்டு அந்தக் கல்லறையின்மீது சாதிய அரசியல் உணர்வுகள் கடந்த கால் நூற்றாண்டுக் காலமாக எழுப்பப்பட்டு விட்டன. திராவிட இயக்கங்கள் இதற்கு எதிரான செயல்பாட்டைத் தேர்தலில் ஒப்போலை (வாக்கு) பெறும் நோக்கில் விட்டுவிட்டன (விற்றுவிட்டன). எனினும் பேராயக் கட்சிக்கு எதிராகத் தமிழர்களை ஒன்றுபடுத்திப் பின்னர் தமிழர்களிடையே நம் தொன்மை மாண்புகளை உணரச் செய்திட வழி பிறக்கும் என நம்புகிறேன். எல்லாம் வல்ல இறைவன் தங்களைக் காத்துப் பேரருள் பொழிந்து வழி நடத்துவாராக! தங்களின் நலன் நாடும் இறைவேண்டல்களுடன், —ஐ. து. பாபு மாசிலாமணி, வணி. இ;.

மதுரை-10

○ : 1408: மதிப்பிற்குரிய பாவலரேறு ஐயா அவர்களுக்கு,

வணக்கம்: தமிழின விடுதலையில் இது காறும் நடந்து வந்த பொன்விழாக் கொண்டாடும் மென்மையாளர்களின் (மிதவாதிகளின்) சொல்வாணிகம் வெகுவிரைவில் அடையாளம் காட்டப்படும் என்ற அளவுக்கு அண்மைக் காலமாக உளநிறைவான இளைஞர்களின் பங்கேற்பு இருந்து கொண்டிருக்கிறது என்பது தாங்களும் அறிந்ததே.

உங்களைப் பற்றி ஓரளவு கேள்விப்பட்டிருந்தாலும், ஓசூரில் நடந்த இன எழுச்சி மாநாட்டிலும், சென்னையில் நடந்த தன்னுரிமை மாநாட்டிலும் நேரிடையாக நானறிய நேர்ந்தது. சொல் வணிகர்களிடை (வார்த்தை வியாபாரிகளிடை) உங்கள் செயல்-பேச்சு, நேர்மை கொண்டதுதான். அதற்கான துயரங்களை ஏற்றால்தான், அந்த வகையில் வருங்காலம் நன்றியுடையதாக இருக்கும். ஆனால் வேகமில்லாமல்—தீவிரமில்லாமல் தமிழின விடுதலையை மென்முறையில் (மிதவாதத்தில்) எந்த வகையில் முன்னெடுக்கப் போகிறீர்கள், என்பதில் எனக்கு நிறைய ஐயமுள்ளது; இருப்பினும் உங்களைப் போலுள்ளவர்களின்றி, ஏன் உங்கள் வழிகாட்டலின்றி, இளைஞர்களால் சரியாகத் தீவிரப் போக்கை இலக்கு சிதறாமல் கொண்டு போகமுடியும் என்பதிலும் ஐயமுள்ளது;

நீங்கள் அண்மையில் யாரிடம்—யாருக்காக உதவி (யாசகம்-?) கேட்டீர்கள்? அதை மறுத்தோர் யார்? அதற்கு நேற்றைய செய்தி ஏடுகளில் உங்களின் விடை—சரியான சறுக்கல் என்று கூறுவதுபோல் இருந்தது.

ஐயா, இந்த அரசியல் வணிகர்களை எதற்கும் நம்பாமல்—சொல்லளவிலல்ல—செயலளவிலான இளைஞர் கூட்டம் சிதறியுள்ளது—எதற்கும் அணியமான ஈக(தியாக)ப் படையை-ஆனால் சிறிது காலத்திற்கு அஃது ஒரு Infra Force ஆக இருக்கும்படியாக அணியம் செய்ய முயற்சிகள் எடுக்கவேண்டுமாய் இனமான உண்மை உணர்வுடன் வேண்டுகிறேன். அன்புடன்

—த. உதயன், ஓசூர்.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005. (தமிழகம்)